விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 02 சனிக்கிழமை (18.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 273

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

## கொரோனாவால் வவுனியாவில் 5 பேர் பலி

(வவுனியா)
வவுனியாவில் கோவிட் தொற்றுக் காரணமாக நேற்று 5 மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ள 15

## 5 இலட்சத்தை கடந்த கோவிட் தொற்றாளர்கள்

நேற்றும் 2,070 பேருக்கு தொற்று

(கொழும்பு)
கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 2,070 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.
இதற்கமைய நாட்டில் கொரோனாத் 15

## 12 ஆயிரத்தை நெருங்கும் கோவிட் உயிரிழப்புகள்

மேலும் 121 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 121 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 62 15

## நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு ஒக்ரோபர் 1 வரை ஊரடங்கு நீடிப்பு

### ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு



(கொழும்பு)
நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு நாடு முழுவதும் தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை ஒக்ரோபர் மாதம் 01ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## மதுச்சாலைகளை திறக்க அனுமதி

(கொழும்பு)
நாட்டில் ஊரடங்கு உத்தரவு வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ள நிலையில் மதுபானசாலைகளைத் திறக்க அரசு அனுமதியளித்துள்ளது.
மதுவரித்திணைக்களம் வழங்கிய அறி 15

## வவுனியாவில் திரண்ட மதுப் பிரியர்கள் 13 பேர் கைது

(வவுனியா)
தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்ட நேரத்தில் வவுனியா மதுபானச்சாலைகளின் முன்னால் அதிகளவான மதுப் பிரியர்கள் குவிந்த நிலையில் சுகாதாரப் 15

## யாழில் சமூக இடைவெளியை மறந்த மதுப் பிரியர்கள்



(யாழ்ப்பாணம்)
நாட்டில் கொரோனாத் தொற்றினைக் கட்டுப்படுத்தும் முகமாக நாட்டில் பயணத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ளதோடு மதுபானசாலைகள் 15

## மதுபானசாலைகளை திறக்க அனுமதிக்கவில்லையாம்?

மதுவரித் திணைக்கள ஆணையாளர்

(கொழும்பு)
நாட்டில் மதுபானசாலைகளைத் திறப்பதற்கு முறையான அனுமதி வழங்கப்படவில்லை என மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜே. குணசிறி தெரிவித் 15

## 15 - 19 வயதானவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்குக

சுகாதார அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோட்டா அறிவுறுத்தல்

(கொழும்பு)
15 தொடக்கம் 19 வயது வரையான மாணவர்களுக்கு பைசர் கோவிட்-19 தடுப்பூசியை வழங்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு ஜனாதிபதி 15

## தடுப்பூசி பெறாதவர்கள் வீதியில் பயணிக்கவோ பொது இடத்துக்கு செல்லவோ தடை விதிக்கவில்லை

சுகாதார அமைச்சு தெரிவிப்பு



(கொழும்பு)
கோவிட்-19 நோய்த்தொற்றுக்கு எதிராக எந்தத் தடுப்பூசியும் பெறாத நபர்கள் வீதிகளில் பயணம் செய்வதற்கோ அல்லது பொது இடங்களுக்கு செல்வதற்கோ தடை விதித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
அரசு மக்களுக்கு 15

## ஊரடங்கை கடுமையாக அமுல்படுத்துங்கள்

பொலிஸ்மாஅதிபருக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)
நாட்டில் அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை கண்டிப்பாக அமுல்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொலிஸ்மா 15

## கோண்டாவிலில் உயிரிழந்தவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
உயிரிழந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத் 15

## உயிரிழந்த இளைஞனுக்கு நீதிகோரி யாழில் போராட்டம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் முன்பாக சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட இளைஞனின் மரணத் 15

# ராஜபக்ஷ அரசு நாளுக்கு நாள் புதிய பிரச்சினையை உருவாக்குகின்றது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சீற்றம்



(கொழும்பு)

**நாட்டின் மொத்த பொருளாதார பொறிமுறையையும் அனைத்து மக்களினது வாழ்க்கையையும் பாரிய பேரழிவுக்குள் தள்ளிக்கொண்டிருக்கின்ற அரசாங்கம் நாளுக்கு நாள் புதிய பிரச்சினைகளை உருவாக்கிக்கொண்டு அவற்றுக்கு தவறான தீர்வுகளை எடுத்துக்கொண்டிருக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.**

அண்மைக்காலத்திற்குள் குறுகிய சிந்தனையுடன் கண்மூடித்தனமாக தீர்மானமொன்றை அரசாங்கம் எடுத்ததினால் இந்த விவசாய மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் அந்த அறிக்கையில்,

அரசாங்கம் இரசாயன உரத் தடைத் திட்டத்தை கொண்டுவந்தமை வெறும் அரசியல் திட்டமேயன்றி நடைமுறை சாத்தியமற்ற தான்தோன்றித்தனமான தீர்மானமாகும்.

உரம் இல்லாமையால் வேளாண்மை விவசாயிகளுடைய அறுவடைகள் தீர்க்கமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளதோடு பெரும்பாலான விவசாயிகள் தங்களின் விவசாயத்தைக் கைவிடுகின்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வியர்வையும் உழைப்பையும் உதிர்ந்து விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதோடு பொருளாதார மத்திய நிலையங்களில் விவசாயிகள் உதவியற்றவர்களாக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அரிசி மாபியாவை நிறைவு செய்வதாகக் கூறிகற்பனைப் பிரசாரங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாளில் இருந்து வெறும் ஊடகக் கண்காட்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

பொதுவாக விவசாயம் குறித்த பொதுவான அடிப்படை அறிவு அரசாங்கத்திற்கு இருந்தால் விவசாயிகளுக்குத் தேவையான உள்ளீடுகளை குறித்த காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் சார்பாக விவசாயிகள் இந்தப் பிரச்சினைகளுக்கு உணர்திறனான உடனடித் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்குமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)

# மத்திய வங்கியின் முக்கிய அதிகாரி பதவி நீக்கம்

## பதவி ஏற்று இரு நாட்களில் ஆட்டத்தை ஆரம்பித்தார் கப்ரால்



(கொழும்பு)

தடயவியல் கணக்காய்வு தொடர்பில் மத்திய வங்கியின் பிரதான அதிகாரியாகச் செயற்பட்டவரும் பிணைமுறி மோசடி விவகார குற்றவியல் விசாரணைகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து செயற்பட்டவருமான கே.எம்.ஏ.என்.தவுலக, மத்திய வங்கியின் நிதிச் சபை செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

மத்திய வங்கி ஆளுநராக, அஜித் நிவாட் கப்ரால் பதவியேற்று இரு நாட்களுக்குள்ளாகவே அவர் இவ்வாறு பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகளுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட தடயவியல் கணக்காய்வு விசாரணைகளின் பிரகாரம் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் அஜித் நிவாட் கப்ரால் (2005 - 2015) ஆகியோருடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் கே.எம்.ஏ.என். தவுலகவின் பொறுப்பிலேயே இருந்து வந்தது.

இவ்வாறான நிலையிலேயே, அவர் நிதிச்சபையின் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த குற்றவியல் விசாரணை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடனும் இணைந்து செயற்பட்டவர் தவுலக என்பதுடன், அவரின் நீக்கமானது விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. (ம-03)

# சர்வதேச தரப்பு எமக்கெதிராக பாரிய குற்றச்சாட்டு - சரத் வீரசேகர

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச தரப்பு எமக்கெதிராக பாரதூரமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்ற நிலையில் லொஹான் ரத்வத்தவின் செயற்பாடு மோசமான நிலைமையை ஏற்படுத்தும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்தி சித்திரவதைக்கு உட்படுத்தியதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே அதற்கமைய சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்படும் எனவும் எவரும் இந்த விடயத்தில் அச்சம் கொள்ளத்தேவையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் மறுவாழ்வு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மீதான குற்றச்சாட்டு குறித்து சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள், சுயாதீன அமைப்புகள், சர்வதேச தரப்பு என பலரும் தமது எதிர்ப்பினை முன்வைத்து வருகின்ற நிலையில் அவர் இந்த விடயத்தினைத்தெரிவித்துள்ளார். (ம-03)

# லொஹான் ரத்வத்தவின் குற்றத்திற்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்

## சிங்கள ராவய அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் குற்றத்திற்கு உடனடியாக தண்டனை வழங்கப்பட வேண்டும் என சிங்கள ராவய அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்தன தேரர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

சிறைச்சாலைக்குச் சென்ற முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தமிழ் அரசியல்வாதி ஒருவருக்கு தமது பாதுகாப்புத் துப்பாக்கியினை காண்பித்து அச்சுறுத்தல் விடுத்த சம்பவமானது மிகவும் பாரதூரமான விடயமாகும். இது பாரிய குற்றச்செயலாகும்.

குற்றம் பாரியளவில் செய்யப்பட்டுள்ளது. ஆகவே நீதி நிலைநாட்டப்பட வேண்டும். குற்றத்தினைச் செய்துவிட்டு, பதவியை விலகினால் எல்லாம் சரியாகிவிடாது. குற்றத்திற்கு தண்டனையே வழங்கப்பட வேண்டும்.

இல்லை என்றால் எதிர்காலத்தில் நாட்டு மக்களும் குற்றங்களைச் செய்துவிட்டு, அமைச்சர்கள் பாணியில் அவர்களும் செய்ய முற்படுவார்கள். லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக உரிய வகையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த அரசாங்கம் இத்தகைய வன்முறைகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருமாயின் இறுதிக் காலத்தில் மக்களின் தாக்குதலுக்கு உள்ளாகித்தான் இறந்து போவார்கள் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ம-03)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய 8 பேர் கைது

## மாந்தை மேற்கில் சம்பவம்

(மாந்தை)

மாந்தை மேற்கு பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள முதலியார் கமம் பகுதியில் சட்ட விரோதமான முறையிலும் அனுமதிப் பத்திர விதிமுறைகளை மீறியும் மண் ஏற்றிச் சென்ற மூன்று டிப்பர் மற்றும் ஐந்து உழவு இயந்திரங்களை இலுப்பைக்கடவை பொலிஸார் கைப்பற்றியுள்ளதோடு, எட்டு சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

இலுப்பைக்கடவை பொலிஸ் பிரிவில் உள்ள முதலியார்கமம் பகுதியில் நேற்று அதிகாலை இரவு சட்ட விரோதமான முறையிலும் அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறியும் மண் ஏற்றிச் சென்ற 3 டிப்பர் மற்றும் 5 உழவு இயந்திரங்களை பொலிஸார் மணலுடன் கைப்பற்றியுள்ளதோடு, டிப்பர் மற்றும் உழவு இயந்திரங்களின் சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 8 சாரதிகளும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 22 ஆம் திகதி கைப்பற்றப்பட்ட மணல் மற்றும் வாகனங்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளன. அன்றையதினம் குறித்த 8 சாரதிகளும் மன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர். (ம-03,285)

# மாகாணங்களுக்கு இடையிலான கட்டுப்பாடுகளை தொடர்ந்தும் அமுல்படுத்துங்கள்

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

**மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகளை தொடர்ந்தும் அமுல்படுத்த வேண்டும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**



மாகாணங்களுக்கு இடையிலான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுமாயின் மீண்டும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட ஆரம்ப நாட்களில் அது நன்றாகப் பின்பற்றப்பட்டதாகவும் ஆனால் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு தொடர்பில் யாரும் கண்டுகொள்வதில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக அத்தியாவசிய சேவைகள் எவை என்பதை அடையாளம் காண முடியாத அளவிற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக, எதிர்காலத்தில் நாடு திறக்கப்படுமாயின் கடுமையான பயணக் கட்டுப்பாடுகளுடன் செயற்பட வேண்டும் என உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அதிகளவிலான அடையாளம் காணப்படாத கொரோனா நோயாளர்கள் தொடர்ந்தும் இருக்கக் கூடும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# நாங்கள் இறந்து விட்டால் சாட்சியங்கள் அழிந்துவிடும்

## அரசு இதையே எதிர்பார்க்கிறது

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(மன்னார்)

காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள், உறவுகளுக்காகவே உறவுகளாகிய நாங்கள் இன்று வீதியில் இறங்கிகண்ணீர் சிந்தி போராடி வருகிறோம்.

இதற்கு சர்வதேசம் நீதியை பெற்றுத் தர வேண்டும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தின் இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார். மன்னாரில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் இறப்பதற்கு முன் எமது பிள்ளைகளின் நிலை என்ன என்று எமக்கு தெரிய வேண்டும்.

எமது பிள்ளைகளின் நிலை என்ன? அவர்களை எங்கே வைத்துள்ளீர்கள்?, அவர்கள் இருந்தால் அவர்களை விடுதலை செய்ய உதவுங்கள் என்று தான் நாங்கள் இன்று உலக நாடுகளிடம் கேட்கின்றோம்.

ஜெனிவா பேச்சுவார்த்தையில் எமக்கு ஒரு நல்ல முடிவு கிடைக்க வேண்டும். இலங்கை இராணுவத்தையோ அல்லது அரசாங்கத்தையோ நாங்கள் நம்பவில்லை.

எங்களுக்கு சர்வதேசம் ஒரு நல்ல பதிலை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜெனிவா 48 ஆவது அமர்வில் கோரிக்கை விடுக்கின்றோம்.

எங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்க வேண்டும். எங்களின் காலங்கள் இன்னும் அதிகம் இல்லை. நாங்கள் இறந்து விட்டோம் என்றால் சாட்சியங்கள் அழிந்து விடும்.

அதனையே அரசாங்கம் பார்த்துக் கொண்டு இருக்கின்றது. ஒரு அம்மா உயிருடன் இருக்கும் வரை தான் பிள்ளைகளுக்கான போராட்டம் நடந்து கொண்டு இருக்கும்.

எனவே எங்களுக்காக சர்வதேசம் ஜெனிவா பேச்சு வார்த்தையில் பேசி தீர்வை பெற்றுத் தர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (7-4-6-285)

# முதியவர் கொடுப்பனவை கி/உ ஊடாக பெற்றுத்தர கோரிக்கை

(தர்மபுரம்)

தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் பல தபால் நிலையங்களில் முதியோர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டு வரும் நிலையில் பயணத் தடையினால் பொது போக்குவரத்து இல்லாத காரணத்தினால் மாதாந்தம் வழங்கப்படுகின்ற முதியோர் கொடுப்பனவு பணத்தை பெறுவதற்கு பல மைல் தூரம் வாடகைக்கு முச்சக்கர வண்டிகளில் 250 ரூபாய் பணத்தை செலுத்தி 300 ரூபாய் பணத்தை பெறுவதற்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக முதியவர்களினால் தெரிவிக்கப் படுகின்றது.

முன்பு பயணத் தடை உள்ள காலங்களில் தமது வீடுகளுக்கு முதியோர்களுக்கான கொடுப்பனவு கிராமசேவையாளர் ஊடாக வழங்கி வைக்கப்பட்டமை அதன் காரணமாக இருப்பிடத்தில் இருந்தே நிம்மதியாக பணத்தை பெற்றதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது கொடுப்பனவை எமது கிராம உத்தியோகத்தர் பிரிவின் ஊடாகவே பெறுவதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என முதியவர்கள் தெரிவித்துள்ளனர். (7-4-6-316)

# 75 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது



(தர்மபுரம்)

தர்மபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெத்தலியாற்று காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 75 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பனவற்றை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். மேலும் சந்தேக நபர் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (7-4-6-316)

# வரையறுக்கப்பட்ட பாராளுமன்ற நடவடிக்கைகளால் 100 கோடி ரூபாய் இலாபம்

(கொழும்பு)

கொவிட் தொற்று நிலைமை காரணமாக பாராளுமன்றத்தில் பல்வேறு நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டதன் மூலம் செலவுகள் குறைவடைந்துள்ளன.

இதன் காரணமாக நூறு கோடி ரூபா வரை இதுவரை மீதமாகி இருக்கிறது என பாராளுமன்ற உள்ளக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

பாராளுமன்ற கூட்டத்தொடர் மற்றும் பாராளுமன்றத்தில் இடம்பெறும் பல்வேறு செயற்குழு கூட்டங்கள் வரையறுக்கப்பட்டமை அல்லது இடம் பெறாமை, உணவு விநியோகம் பாராளுமன்ற கூட்டத்தொடர் இடம் பெறும் தினத்துக்கு மாத்திரம் வரையறை செய்தமை மற்றும் பாராளுமன்ற ஊழியர்களை சேவைக்கு அழைப்பதை மட்டுப்படுத்தியமை போன்ற காரணங்களால் இவ்வாறு பாராளுமன்ற செலவுகள் குறைவடைந்திருப்பதாக பாராளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் பாராளுமன்ற கூட்டத்தொடர் வரையறுக்கப்பட்டமை மற்றும் பாராளுமன்ற ஊழியர்களை சேவைக்கு அழைப்பதை மட்டுப்படுத்தியதனால் நீர், மின்சாரம்,போக்குவரத்து போன்ற வசதிகளுக்காக செலவாகும் நிதி பாரியளவில் குறைவடைந்திருக்கிறது.

அத்துடன் இந்த காலப்பகுதியில் குளிரூட்டி இயந்திரங்கள் செயற்படுத்தப்படாமல் இருப்பதால் பாரியளவில் நிதி நன்மை கிடைத்திருப்பதாகவும் குறித்த அதிகாரி தெரிவித்தார்.(நி-5)

# குற்றச்சாட்டை நிராகரித்தது இலங்கை

தென்னாபிரிக்காவுடனான இருபது-20 தொடரின் பின்னர் இலங்கை அணி வீரர்கள் மீது சில ஊடக அறிக்கைகள் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை இலங்கை கிரிக்கெட் மறுத்துள்ளது. தென்னாபிரிக்கா அணியுடனான இருபது-20 தொடரின் போது இலங்கை அணி வீரர்கள் சிலர் முழுமையான அர்ப்பணிப்புடன் போட்டிகளில் விளையாடவில்லை என சில ஊடக அறிக்கைகளை முன் வைத்தன.

இந்நிலையில் இந்த குற்றச்சாட்டுக்களை வன்மையாக மறுத்துள்ள, இலங்கை கிரிக்கெட் நிர்வாகம், தென்னாபிரிக்காவுக்கு எதிராக இலங்கை வென்ற ஒருநாள் தொடரில் விளையாடிய அதே குழுவினர் தான் இருபது-20 தொடரிலும் பங்கெடுத்தனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் வென்றது மட்டுமல்லாமல், ஐ.சி.சி. ஆண்கள் கிரிக்கெட் உலகக் கிண்ண சுப்பர் லீக் தர வரிசைப்பட்டியலில் சிறப்பான புள்ளிகளைப் பெற்றது இலங்கை அணி. (4-6)

# விலகினார் விராட்




அடுத்த மாதம் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ள இருபது-20 உலகக் கிண்ண தொடருக்குப் பின் விராட் கோலி, இந்தியாவின் இருபது-20 அணித் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

பயிற்சியாளர் ரவி சாஸ்திரி மற்றும் துணைத் தலைவர் ரோஹித் சர்மாவுடன் விவாதித்து, டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் தனது அணித் தலைமை பணிச் சுமையை சிறப்பாக நிர்வகிப்பதற்காக இந்த முடிவுக்கு வந்ததாக கோலி விளக்கம் அளித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், 'இந்தியாவுக்காக விளையாடியது மட்டுமல்லாமல், இந்திய அணியை வழிநடத்தியது எனக்கு கிடைத்த மிகப் பெரிய அதிர்ஷ்டம். இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக நான் இருந்த நேரத்தில் எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி.

என்னுடைய அணி வீரர்கள், அணி நிர்வாக குழு, தேர்வுக் குழு, பயிற்சியாளர்கள் மற்றும் நாங்கள் வெற்றி பெற வேண்டும் என நினைத்த ஒவ்வொரு இந்தியருக்கும் நன்றி. அவர்கள் இல்லாமல் நான் இதை செய்திருக்க முடியாது எனத் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு டோனியிடம் இருந்து இருபது-20 அணித்தலைவர் பொறுப்பை ஏற்ற விராட் கோலி, அணித்தலைவராக தனது முதல் தொடரிலேயே இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரை 2-1 என வெற்றி கொண்டார்.

இதுவரை விராட் கோலி 45போட்டிகளில்இந்திய அணியை வழிநடத்தியுள்ளார். இதில் 29 வெற்றிகள், 14 தோல்விகள் மற்றும் இரண்டு போட்டிகளுக்கு முடிவில்லை.

சர்வதேச இருபது-20 கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் குவித்த விராட் கோலி, 3,000 இருபது-20 ஓட்டங்களை குவித்த ஒரே ஆண்கள் கிரிக்கெட் வீரர் ஆவார்.

32 வயதான விராட் கோலி, இதுவரை 89 இருபது-20 போட்டிகளில் விளையாடி 3,159 ஓட்டங்களை குவித்துள்ளார். அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 94 ஆகும். 28 அரைசதங்கள் அடித்துள்ளார்.

விராட் கோலி பதவியை துறக்கும் அதே வேளை, ஐ.பி.எல். கிரிக்கெட் மட்டுமல்லாமல் சர்வதேச கிரிக்கெட்டிலும் சாதித்துக்காட்டியுள்ள வெற்றிகரமான அணித்தலைவர் ரோஹித் சர்மா, இருபது-20 அணியை வழிநடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (4-6)

# வர்ணனையாளர் ஹோல்டிங் ஓய்வு

முப்பது ஆண்டுகளுக்கு மேலான தனது புகழ் பெற்ற கிரிக்கெட் வர்ணனை பணியிலிருந்து மைக்கேல் ஹோல்டிங் ஓய்வு பெற்றுள்ளார்.

67 வயதான ஹோல்டிங் 1975-1987 வரையான காலப் பகுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்காக 391 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

கிரிக்கெட் உலகில் "விஸ்பரிங் டெத்" என்ற புனைப் பெயர் பெற்ற ஹோல்டிங் ஜமைக்கா வரலாற்றில் மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

அவர் 1988 இல் கரீபியனில் தனது கிரிக்கெட் வர்ணனை வாழ்க்கையைத் தொடங்கியதுடன், இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக ஸ்கை ஸ்போர்ட்ஸ் வர்ணனை குழுவின் ஒரு பகுதியாக இருந்து வந்தார். (4-6)



# இருபது-20 தொடருக்கு ராகுல் பொருத்தமானவர்

## கவாஸ்கர் கணிப்பு

இந்திய அணிக்கான அடுத்த இருபது-20 கப்டனாக யார் சரியாக இருப்பார் என்பது குறித்து, முன்னாள் இந்திய வீரர் சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் துவங்கவுள்ள இருபது-20 உலகக்கிண்ண தொடருக்கு பின், நான் இருபது-20 கப்டன் பொறுப்பில் இருந்து விலகுவதாக கோலி அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

கோலியின் இந்த அறிவிப்பு அவருடைய ரசிகர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை கொடுத்துள்ளது. இருப்பினும் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கோலி இந்த முடிவை எடுத்துள்ளதால், அவரை முன்னணி வீரர்கள் பலரும் பாராட்டி வருகின்றனர்.

இதற்கிடையில், இந்திய அணிக்கு அடுத்த இருபது-20 கப்டனாக யார் இருப்பார் என்ற கேள்வி இப்போதே எழுந்து வருகிறது.

இந்நிலையில், இந்திய அணியின் முன்னாள் வீரரான சுனில் கவாஸ்கர், தன்னைப் பொறுத்தவரை இந்திய அணிக்கு புதிய கப்டன் என்றால் அதற்கு கே.எல். ராகுல் சரியாக இருப்பார்.

இதுவரை அவர் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். இதனால், கே.எல் ராகுலை இந்திய அணியின் அடுத்த கப்டனாக உருவாக்க முயற்சி செய்யலாம். அதற்கு முதலில் இவரை துணைக் கப்டனாக வைத்து, அதன் பின் கப்டன் ஆக அறிவிக்கலாம் என்ற யோசனை கூறியுள்ளார்.(4-6)



# ரிஷாப் பண்டே கப்டனாக தொடருவார்

## டெல்லி அணி நிர்வாகம்



டெல்லி கேப்பிட்டல்ஸ் கப்டனாக முதலில் பட்ஸ்மேன் ஸ்ரேயாஸ் அய்யர் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் இந்தியாவில் ஐ.பி.எல். தொடங்குவதற்கு முன்பே தோள்பட்டை காயத்தில் சிக்கியதால் ஐ.பி.எல்.இல் இருந்து விலகினார். அதன் பிறகு காயத்துக்கு சிகிச்சை செய்து கொண்ட அவர் ஓய்வில் இருந்தார்.

அவருக்கு பதிலாக இளம் விக்கெட் கீப்பர் ரிஷாப் பண்ட் கப்டன் பொறுப்பை ஏற்றார். முதல் 8 ஆட்டங்களில் அந்த அணி 6-ல் வெற்றி, 2-ல் தோல்வி என்று 12 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

இதற்கிடையே, ஐ.பி.எல். தள்ளிவைக்கப்பட்டதால் கிடைத்த 4 மாத கால அவகாசத்தில் ஸ்ரேயாஸ் அய்யரும் காயத்தில் இருந்து குணமடைந்து அணியுடன் இணைந்து விட்டார். அவர் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். இதனால் டெல்லி அணியின் கப்டன் யார்? என்பதில் குழப்பம் நிலவியது. இந்த நிலையில் ஐ.பி.எல். 2ஆம் கட்ட சீசனிலும் ரிஷாப் பண்டே கப்டனாக தொடருவார் என்று டெல்லி அணி நிர்வாகம் நேற்று முன்தினம் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது. (4-6)

# மரண அறிவித்தல்

பிறப்பு ❖ 1955 ❖ 07 ❖ 07



இறப்பு ❖ 2021 ❖ 09 ❖ 14

## திருமதி. தனபாலசிங்கம் இலங்கைநாயகி

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல: 352, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் இலங்கைநாயகி 2021.09.14 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோதிநாதன் கமலாம்பிகை தம்பதிகளின் மருமகளும், திரு. சோதிநாதன், தனபாலசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் புனிதவதி, குணபாலசிங்கம், காலஞ்சென்ற சிவசோதிநாதன், புஸ்பரதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சோதிமலரின்(லண்டன்) அன்பு மைத்துனியும், அருட்செல்வன்(லண்டன்), வித்தியவாணி(ஜேர்மனி), சத்தியரூபி, முரளிதாசன்(லண்டன்), தனுஷியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாமினி(லண்டன்), தர்மகுமார்(ஜேர்மனி), ஜெயகாந்தன்(அதிபர், யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை), அரசி(லண்டன்), மதியழகன் ( CT SCAN பிரிவு போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், செந்தூரன்(லண்டன்), அபர்ணா (லண்டன்), அஸ்மிகா(லண்டன்), அக்ஷயா(லண்டன்), கஜந்தி(ஜேர்மனி), கஜந்தன்(ஜேர்மனி), காயத்திரி (ஜேர்மனி), கீர்த்தன்(ஜேர்மனி), எழிட்சிகா, தரங்கினி, கஜீபன்(லண்டன்), ஜகிதன்(லண்டன்), லக்சனா(லண்டன்), திவ்யானி(லண்டன்), தருண், வர்ஷனா, கிபிசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 2021.09.19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் இடம்பெற்று தகனம் செய்யப்படும்.

**352, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்
குடும்பத்தினர்
**0774671903, 0212228695**

(7921)

## இராசிபலன்

18.09.2021
புரட்டாதி 02, சனிக்கிழமை
துவாதசி முற்பகல் 7.46 மணிவரை
அவிட்டம் பின்னிரவு 4.47 மணிவரை
சுபநேரம் -3.03- 4.33 மணிவரை
இராகு காலம் -9.03-10.33 மணிவரை
சந்திராஷ்டமம்- புனர்பூசம்
சனிப்பிரதோச விரதம்

வள்ளவன்

**மேஷம்**: தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்**: பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்**: உடல் நலனில் கவனம் தேவை, எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கடகம்**: புதிய பொருட் சேர்க்கையுண்டு, எண்ணியது நிறைவேறும் நாள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்**: நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி**: தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்**: வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, ஆனந்தமான நாள்.

**விருச்சிகம்**: பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, இனிய செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு**: வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்**: மன அமைதி கூட மகத்தான வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.

**கும்பம்**: குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சயன சுகக் குறைவான நிலைகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மீனம்**: பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

உன் கவலைகளையெல்லாம் தாங்கும் சுமைதாங்கி தான் கடவுள்

# பொருளாதாரத்தில் பின்தங்கிய கலைஞர்களுக்கான உதவித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

நீலன் திருச்செல்வம் அறக்கொடை நிதியம், யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்வஸ்திக் நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் ஐந்நூறு பொருளாதாரத்தில் பின் தங்கிய கலைஞர்களுக்கான ஐயாயிரம் ரூபாய் பெறு மதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளது.

இந்த செயற்றிட்டம் வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் உள்ள யாழ்ப்பாணம் பருத்தித்துறை, தென்மராட்சி, ஊர்காவற்றுறை, வேலணை, மருதங்கேணி, கரைச்சி, பூநகரி, கண்டாவளை, பளை, மாந்தை மேற்கு, துணுக்காய், ஒட்டிசுட்டான், கரைத்துறைப்பற்று, நெடுங்கேணி என மொத்தமாக பதினைந்து பிரதேச செயலர் பிரிவில் வசிக்கின்ற தெரிவு செய்யப்பட்ட ஐந்நூறு கலைஞர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கப்படவுள்ளது.

குறித்த செயற்றிட்டம் மாவட்ட செயலகங்கள் ஊடாக குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்குறித்த பிரதேசங்களில் உள்ள கலைஞர்கள் குறித்த பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஸ்வஸ்திக் நுண்கலைக்கல்லூரியினால் கோரப்பட்டுள்ளது.

(4-7-6)

# இணையவழி ஆய்வரங்க நிகழ்வு

## மரியசேவியர் அடிகள் ஒரு பன்முகப் பார்வை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக 'கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை' என்னும் தலைப்பில் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் மெய்நிகர் வழியில் சூம் செயலிக்கூடாக திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற ஆய்வரங்கத் தொடரின் நான்காவது நிகழ்வு நாளை 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 7893644809, கடவுச்சொல் cpa என்பதற்கூடாக இந் நிகழ்வில் இணைந்துகொள்ள முடியும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (4-7-6)

# அறநெறிச் சாரம் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தென்றல் அலைவரிசையில் இடம்பெற்று வரும் அறநெறிச்சாரம் நிகழ்ச்சியில் இன்று காலை 8.00 மணிக்கு "தெய்வீகக் குழந்தைகள்" (பகுதி 8) எனும் தொனிப்பொருளிலான கதைகளூடான கருத்துரை மற்றும் அறநெறி மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிகொணர்வு நிகழ்வும் இடம்பெறும்.

இந் நிகழ்வில் கேட்கப்படும் கேள்விக்கு மாணவர்கள் பதில் எழுதிப் பரிசிலையும் செல்ல முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-7-6)



யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஐக்கிய அமெரிக்க பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்புடன், மருத்துவப்பீட பழைய மாணவர்களால் யாழ். பல்கலைக்கழக மருத்துவப்பீடத்துக்கு கையளிக்கப்பட்ட தகவல் தொழில் நுட்ப கூடத்தின் திறப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி வைத்தியக் கலாநிதி இ. சுரேந்திரகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தகவல் தொழில் நுட்ப கூடத்தைத் திறந்து வைத்தார். (படங்கள்- சிவசாந்தன்)

# வர்த்தக நிலையங்களில் கள ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் கட்டளைக்கமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வட மாகாண உதவிப்பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைவாகவும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, சங்கானை ஆகிய பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட நடமாடும் மரக்கறி வியாபாரிகளிடம் விலைதொடர்பான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன்போது விலை காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது.

வீடுகளுக்கு பொதிசெய்யப்பட்ட பொருட்களை விநியோகிக்கும் வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன் விலை தொடர்பான விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் விசாரணைசெய்யப்பட்டதுடன் அதற்கான தீர்வுகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டது. அத்துடன் முறைகேடான வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது வழக்கு தாக்கலும் செய்யப்பட்டது. (4-7-33)

# Invitation for Bids (IFB)

## Jaffna Municipal Council

### Purchasing of Street Lights

### JMC/PU/Street Light/2021 - 01

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of Municipal Council, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders as in the table below:
2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. Interested eligible bidders may obtain further information from Engineer, Jaffna Municipal Council. TP: 021 222 1186 Fax: 021 222 1187 EMail:mcjaffnamailc@yahoo.com office hours from 09:00 hrs. to 15:00 hrs.
4. Qualifications requirements include: Possessing the minimum 3 years' experience in selling and having island wide maintenance in the particular brand and field. A margin of preference for eligible locally produced goods offered shall not apply. Additional details are provided in the bidding document.
5. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders from the address given below from **21st September 2021 until 11th October 2021 from 09:00 hrs. to 15:00 hrs.** on the submission of a written application and upon a payment of non-refundable fee of Rs.2000.00 + All Taxes the payment method will be cash or bank draft drawn in favor of **Commissioner, Jaffna Municipal Council.**
6. Bids must be delivered to the address given below on or before **12th October 2021 at 15.00 hrs.** Bid number must be written on the top of envelop. Late bids will be rejected.
   Immediately after closing of bids will be opened in the presence of the bidders' representatives' who choose to attend at the address given below. **All bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**
7. A pre bid meeting will be held at Commissioner, Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna on **01st October 2021** at 14:00 hrs., interested bidders may participate in this meeting their own expenses.
8. The address referred to above is **Commissioner, Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna.** The Bid Name & No must be mentioned on the top of the envelop. The bid will be sent in post/ in courier service or shall be deposited in the bid box in the above address.
9. The bid validity shall be until: **14.12.2021 (63 days after the deadline for bid submission)**

[c-26671]

| S. No. | Bid Name & No. | Name of the Item | Period of Contract | Bid Security | |
|---|---|---|---|---|---|
| | | | | Amount | Required Period |
| 01 | Purchasing of Street Lights<br>JMC/PU/Street Light/2021-01 | 30 Watts Energy saving bulb-217 Nos.<br>40 Watts tube light set - 40 Nos.<br>50 Watts signal high power COB LED Street Light – 490 Nos.<br>100 Watts double high-power COB LED Street Light – 70 Nos.<br>150 Watts triple high power COB LED Street Light – 40 Nos. | 1 Month | 60000.00 | 11.01.2022 |

Chairman,
Procurement Committee,
Jaffna Municipal Council,
Point Pedro Road, Nallur.

# உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டல்களுக்கு அமைவாக பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்

## கல்வி அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்டு பின்னர் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டலுக்கு அமைய பாடசாலைகளை ஆரம்பிப்பது அவசியமாகும்.

இதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக உலகளாவிய ரீதியில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

நடவடிக்கைகள் பற்றி ஜனாதிபதி தலைமையிலான கொரோனா-19 வைரஸ் பரவலை தடுப்பதற்கான செயலணி தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார். (நி-5)

# விமான நிலைய அதிகாரிக்கு அனுப்பிய செய்தி போலியானது

## கமால் குணரட்ண

(கொழும்பு)

விமான நிலைய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட போலி மின்னஞ்சல் செய்தி தொடர்பில் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமால் குணரத்ன இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக முன்னதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பெறப்பட்ட மின்னஞ்சல் காரணமாக இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக கூறப்படுகின்றது.

எதிர்வரும் 20 ஆம் திகதிவிமான நிலையம் மற்றும் அரசு கட்டிடங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் தாம் குறிப்பிடும் நான்கு நபர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் அந்த மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மின்னஞ்சல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் சந்தேகநபர்கள் விமான நிலைய வலைத்தளத்திலிருந்து அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக தரவுகளைத் திருடி இதைச் செய்திருக்கலாம் என உளவுப் பிரிவினர் சந்தேகிக்கின்றனர்.

பங்களாதேஷ் இராணுவத்தின் இணையத்தளம் ஹெக் செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் மூலமே குறித்த மின்னஞ்சல் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களில் அவசரகாலத்தில் எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து கடந்த 14ஆம் திகதி முதல் ஒத்திகை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின. (நி-5)

# இந்திய பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்த இலங்கை பிரதமர்

(கொழும்பு)

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.நேற்றைய தினம் இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில், வாழ்க்கையில் அடுத்த வருடத்திற்கு காலடி எடுத்து வைக்கும் என்னுடைய நல்ல நண்பரான இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்துக்கள்.

இந்த கடினமான காலத்தில் இந்தியாவை வழிநடத்தும் உங்களுக்கு வலிமை, வெற்றி மற்றும் சிறந்த ஆரோக்கியம் என்பவை கிடைக்க வாழ்த்துகிறேன் என குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# இராணுவ மயமாக்கலை எமது கட்சி அனுமதிக்காது

## தயாசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவ மயமாக்கல் நடவடிக்கையை எமது கட்சி அனுமதிக்காது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "அவசரகால சட்டத்துக்கு எதிர்ப்பு என்றபோதிலும் அத்தியாவசிய தேவையின் நிமித்தமே அதற்கு ஆதரவாக வாக்களித்தோம். எனவே, அவசரகால சட்டம் நெடு நாளுக்கு நீடிக்கப்படக்கூடாது.

இராணுவ மயமாக்கல் நடவடிக்கையை எமது கட்சி அனுமதிக்காது. அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிடுவோம். எனினும், இராணுவ மயமாக்கலை இலக்காகக்கொண்டு அவசரகால சட்டம் நிறைவேற்றப்படவில்லை.

மாறாக உணவு பொருட்களை பதுக்கி, கறுப்பு வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாலேயே அதனை கட்டுப்படுத்தும் நோக்கில் அவசரகால சட்டம் கொண்டு வரப்பட்டது.

குறித்த சட்டத்துக்கு கொள்கை ரீதியில் நாம் எதிர்ப்பு என்றபோதிலும், அத்தியாவசிய தேவையின் நிமித்தம் ஆதரவாக வாக்களித்தோம்.

எது எப்படி இருந்தாலும் அவசரகால சட்டம் நீண்டகாலத்துக்கு நீடிக்காது என நம்புகின்றோம். அதற்காக தேவையும் எழாது." என அவர் தெரிவித்தார். (நி-5)

# வெளிநாடுகளில் தவிக்கும் ஆப்கானிஸ்தான் தூதுவர்கள்



(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டை தலிபான்கள் கட்டுக்குள் கொண்டுவந்ததைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளிலும் உள்ள ஆப்கான் அரசின் தூதர்கள் சொந்த நாட்டிற்கு திரும்ப முடியாமல் தவித்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் உள்ள ஆப்கானிஸ்தானின் தூதர்கள் தங்களது பணி நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளலாம் என தலிபான்கள் அறிவித்த நிலையிலும் ஆப்கான் தூதர்கள் புதிய சிக்கலில் சிக்கியுள்ளனர்.

தூதரக பணிகள் மற்றும் தங்களது சொந்த பணிகளுக்கு பணம் இல்லாததால் அதிகாரிகள் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆப்கானிஸ்தானில் உள்ள தங்களது குடும்பத்தினரை மீட்க முடியாமலும், வெளிநாடுகளில் பணிகளைத் தொடர முடியாமலும் உள்ள தூதரக அதிகாரிகள் அகதிகளாக தங்களை அங்கீகரிக்கக் கோரும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

தூதரக அதிகாரிகளின் இந்த முயற்சியை தலிபான்கள் அறிந்தால் ஆப்கானிஸ்தானில் வசிக்கும் தங்களது குடும்பத்தினருக்கு அச்சுறுத்தல் நேரலாம் என்பதால் தங்களது பெயர்களையும் வெளியிட அஞ்சுவதாக சர்வதேச செய்தி தெரிவித்துள்ளன. (7-4)

# காட்டுத் தீயால் அழியும் உலகின் மிகப்பெரிய மரங்கள்

(வோஷிங்டன்)

**அமெரிக்காவின் கலிபோர்னியாவில் பற்றியெரியும் காட்டுத் தீயால் உலகின் மிகப் பெரிய செக்கோயா மரங்கள் (கலிபோர்னியா செம்மரம்) எரிந்து அழியும் ஆபத்தில் உள்ள நிலையில் அவற்றைக் காப்பாற்றும் பணியில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.**



அலுமினியம் தகடுகளை செக்கோயா மரங்களைச் சுற்றி கவசம் போல சுற்றிஅவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது கலிபோர்னியாவின் செக்கோயா தேசியப் பூங்காவில் எரிந்துவரும் காட்டுத் தீ அருகில் உள்ள பெருங் காட்டைத் தாக்கலாம் என அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். இந்தக்காட்டில் 275 அடி உயரம் கொண்ட ஜெனரல் ஷெர்மன் உள்ளிட்ட சுமார் 2,000 செக்கோயா மரங்கள் உள்ளன.

தீயை அணைக்கும் பணியில் ஹெலி கப்டர்கள், விமானங்கள் ஆகியவற்றின் உதவியுடன் சுமார் 350 வீரர்கள் போராடி வருகின்றனர். உலகத்தில் இப்போதிருக்கும் மரங்களில் மிகப்பெரிய மரமாக ஜெனரல் ஷெர்மன் என அழைக்கப்படும் செக்கோயா மரம் கருதப்படுகிறது. இதன் வயது சுமார் 2,700 வருடங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவில் இந்தக் கோடையில் 7,400 இற்கும் மேற்பட்ட காட்டுத்தீசம்பவங்கள் பதிவாகியுள்ளன. 2.2 மில்லியன் ஏக்கருக்கு மேல் காடுகள் எரிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7-4)

# ஆக்கஸ் ஒப்பந்தம் பொறுப்பற்றது சீனா கடும் விமர்சனம்

(பீஜிங்)

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியா இடையே எட்டப்பட்ட ஆயுத ஒப்பந்தம் பொறுப்பற்றது என சீனா கடுமையாக விமர்சித்துள்ளது.

சர்ச்சைக்குரிய தென் சீனக் கடல் பகுதியில் சீனாவின் செல்வாக்கை கட்டுப்படுத்துவதற்கான முயற்சி என்று இந்த ஒப்பந்தம் பரவலாகப் பார்க்கப்படுகிறது.

ஆனால், இந்த கூட்டு ஒப்பந்தம் சீனாவுக்கு எதிரானது அல்ல என்று அந்த நாடுகள் கூறினாலும் பாதுகாப்பு வல்லுநர்கள் ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் உத்தி சார்ந்த நிலைப்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சி என்று கூறுகின்றனர். இந்த உடன்பாட்டை சீனா கடுமையாக எதிர்த்திருக்கிறது. சற்றும் பொறுப்பில்லாதது என்று சீனா விமர்சித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்துக்கு எதிர் வினையாற்றிய சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன், 'இந்த ஒப்பந்தம் வட்டார அமைதியை மோசமாகப் பாதிக்கும். ஆயுதப் போட்டியைத் தீவிரமாக்கும்' எனக் கூறினார். (7-4)

# மற்றுமொரு தலிபான் ராஜ்ஜியம் உருவாக அனுமதிக்க மாட்டோம்

## மம்தா பானர்ஜி

(டெல்லி)

மற்றுமொரு பாகிஸ்தான் மற்றும் தலிபான் ராஜ்ஜியம் உருவாக மேற்கு வங்கம் எப்போதும் அனுமதிக்காது என மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தில் மூன்று சட்டசபை தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது. இதற்காக தேர்தல் பிரசார பணிகளில் மம்தா பானர்ஜி ஈடுபட்டுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், மற்றுமொரு பாகிஸ்தான் அல்லது தலிபான் ராஜ்ஜியம் உருவாக்க அனுமதிக்க மாட்டோம் எனத் தெரிவித்துள்ளதுடன், நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இருப்போம் எனவும் கூறியுள்ளார். இவருடைய கருத்துக்கு தற்போது எதிர்ப்புகள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4)


# ஆக்கஸ் கூட்டணியின் முதல் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்

(கன்பரா)

முத்தரப்பு பாதுகாப்புக் கூட்டணியின் முதல் பெரிய முயற்சியாக, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஸ்திர தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் அமெரிக்கா, பிரிட்டன் உதவியுடன் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை அவுஸ்திரேலியா கட்டமைக்கவுள்ளது.

காணொலி முறையில் நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் பேசிய பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன், 'புவியியல் ரீதியாகப் பிரிந்திருந்தாலும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரிட்டன் ஆகியவை இயற்கையான கூட்டாளிகள். எங்களது நலன்களும் மாண்புகளும் பகிரப்படுகின்றன. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் வளர்ச்சியடைந்து வரும் எங்களது கூட்டணிக்கு இந்த அமைப்பு பங்களிப்பை வழங்கும்' எனத் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் பேசுகையில், 'இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் நீண்ட காலத்துக்கு அமைதியை நிலைநிறுத்துவதன் அவசியத்தை நாங்கள் அங்கீகரிக்கிறோம். அதை அடைவதற்காக இந்தப் புதிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (7-4)




இந்திய பிரதமர் நரேந்திரமோடியின் 71 ஆவது பிறந்த நாளான நேற்று ஒடிசாவின் பூரி கடற்கரையில் மணற்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. 2035 கடற்சங்குகளை கொண்டு பிரதமர் மோடியின் மணல் சிற்பத்தை பிரபல மணற்சிற்பக்கலைஞர் சுதர்ஷன் பட்னாயக் உருவாகியுள்ளார். பிரதமர் மோடியின் மணற்சிற்பத்துடன் 'ஹேப்பி பர்த் டே மோடி ஜி' எனவும் கடற்சங்குகளால் அமைத்துள்ளார்.

# வவுனியாவில் கொவிட் தொற்றாளர்களின் 22 சடலங்கள் தேக்க நிலையில்

## சுகாதாரப் பிரிவினர் தெரிவிப்பு

(குருமன்காடு)

**கடந்த 5 தினங்களுக்கு முன்னர் மரணமடைந்தவர்கள் உட்பட 22 பேரின் சடலங்கள் தற்போது தகனம் செய்யப்படாத நிலையில் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

கொவிட் தொற்று காரணமாக மரணமடைபவர்களின் உடல்கள் சுகாதார நடைமுறைகளுடன் வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள மின் மயானத்திலேயே தகனம் செய்யப்பட்டு வருகின்றது.

குறித்த மின் மாயானமானது கடந்த நான்கு தினங்களாக பழுதடைந்த நிலையில் தற்போது திருத்த வேலைகள் இடம் பெற்று வருகின்றது.

இந்நிலையில் கொவிட் தொற்றால் மரணமடைந்த 4 பேரின் சடலங்கள் அடக்கம் செய்வதற்காக நேற்று முன்தினம் ஓட்டமாவடிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் இரண்டு சடலங்கள் தகனத்திற்காக கெக்கிராவைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

ஏனைய சடலங்கள் தேக்க நிலையில் உள்ளன. மின் மாயானம் திருத்தப்பட்டாலும் நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக 6 சடலங்களையே எரியூட்ட முடியும். குறித்த சடலங்களை முழுமையாக தகனம் செய்ய ஐந்து தினங்கள் தேவையாகவுள்ள நிலையில் தொடர்ந்தும் இறப்புக்கள் ஏற்பட்டால் தகனம் செய்வதில் மேலும் நெருக்கடி நிலை ஏற்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மாவட்டத்தின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு ஓவ்வொரு வரும் சமூகப் பொறுப்புடன் கொவிட் தொற்றில் இருந்து விடுபட சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைகளைப் பின்பற்றுவதுடன், அரசாங்கத்தினதும், சுகாதரப் பிரிவினரதும் கொவிட் ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர். (7-4-6-250)

# 108 வயது முதியவருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது



(நெளுக்குளம்)

வயோதிப தந்தையொருவருக்கு நேற்றைய தினம் வவுனியா நெடுங்கேணி பகுதியில் நடமாடும் மருத்துவ சேவையினரால் முதலாவது கொரோனாத் தடுப்புசி வழங்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி, சன்னாசி பரந்தன் கிராமத்தில் வசிக்கும் 108 வயது நிரம்பிய தந்தை ஒருவர் கொரோனாத் தடுப்புசி போட விரும்புவதாக கூறியதற்கிணங்க வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் நடமாடும் தடுப்புசிச்சேவையின் மூலம் முதலாவது தடுப்புசி நேற்றைய தினம் வழங்கப்பட்டது.

இவ்வாறு இந்த வயதிலும் தடுப்புசி போடவேண்டுமென்று விழிப்புணர்வுடைய ஒருவரிற்கு அவரது இல்லத்தில் வைத்து அவரது குடும்பத்தினரதும் அவரதும் வேண்டுகோளிற்கிணங்க தடுப்புசி வழங்கியமையிட்டு பெருமை கொள்வதாக வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.(7-4-6-299)




# மாவட்ட செயலரின் அனுமதியின்றி ஒரு அங்குல நிலமேனும் அபகரிக்க கூடாது

## அமைச்சர் டக்ளஸ்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகளை கையாளும் விடயத்தில், மாவட்டச் செயலாளருக்கும், பிரதேச செயலாளருக்குமே முழு அதிகாரமும் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ், எனவே, அவர்களுடன் கலந்தாலோசிக்காமல் ஒரு அங்குல நிலமேனும் யாருக்கும் கொடுக்கப்படவோ, எல்லையிடப்படவோ கூடாது என்று சம்பந்தப்பட்ட தரப்புக்களைப் பணித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கவனம் செலுத்தப்படவேண்டிய விடயங்கள் குறித்து மெய்நிகர் கலந்துரையாடல் ஒன்றை நேற்றுமுன்தினம் நடத்திய, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

இந்த ஆண்டு ஓகஸ்ட் 06ஆம் திகதி காணியமைச்சு அனுப்பிய சுற்றுநிருபம் ஒன்றின் மூலம், வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் காணிகள் தொடர்பான முன்னைய சுற்றறிக்கைகள் சில இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

புதிதாக எங்கேனும் காணிகள் வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் எல்லைப்படுத்தப்படவேண்டுமானால் அதுகுறித்து அந்தப் பகுதி பிரதேச செயலாளரின் அனுமதி பெறப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, வனவளத்திணைக்களமோ, வனஜீவராசிகள் திணைக்களமோ புதிதாக காணிகள் எதனையும் எல்லைப்படுத்த விரும்பினால் அதுகுறித்து அந்தந்தப் பகுதி பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடியே முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று மெய்நிகர் கூட்டத்தில் கலந்துகொண்ட வனவளத் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தருக்கு அமைச்சர் டக்ளஸ் விளக்கினார்.

மேலும் இவ்வாண்டு மே மாதம் அமைச்சரவையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம், கிளிநொச்சிமாவட்டத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவினர் புதிதாக காணிகள் எதனையும் யாருக்கும் வழங்குவதாக இருந்தால், மாவட்டச் செயலாளரின் அனுமதி பெறப்படவேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட முன்னர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட காணிகள் குறித்தும் மாவட்ட செயலாளர் தலைமையில் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (7-4-6-315)

# கடை உடைத்து பொருட்கள் திருட்டு

(நெளுக்குளம்)

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் கடையின் முன்வாயிலை உடைத்து அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளது.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதனை வாய்ப்பாக பயன்படுத்தி குறித்த திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக வியாபார நிலையத்தின் உரிமையாளர் தெரிவிப்பதுடன் குறித்த விடயம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாட்டினையும் அளித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(7-4-6-299)

# கச்சான் செய்கையில் நோய்த்தாக்கம்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக செய்கையில் கச்சான் செய்கையும் மேற்கொள்ளப்பட்டது.

இச்செய்கையில் ஏற்பட்ட நோய்த்தாக்கம் காரணமாக எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (7-4-6-100)



மன்னார் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் பகுதியில் உள்ள ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை சேர்ந்த மக்களின் அத்தியாவசிய உணவுத் தேவையை அடிப்படையாக கொண்டு உணவுப் பொருட்களை இலகுவாக பெற்று கொள் ளும் முகமாக பலநோக்கு கூட்டுறவு சங்கக் கிளை நேற்று முன்தினம் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

(படம்:-ஜோசப் நயன்)

# இன்று புரட்டாதிச் சனி விரதம்

"புரட்டாதிச் சனி விரதம்" என அழைக்கப்படுவது புரட்டாதி மாதத்தில் (தமிழ் மாதம்) வரும் முதல் சனிக்கிழமைகளில் இருந்து தொடராக வரும் நான்கு சனிக்கிழமைகளிலும் சனி பகவானை நினைத்து சனி தோஷம் நீங்க கடைப்பிடிக்கப்படும் விரதமாகும். சனீஸ்வரன் கோசாரமாக சஞ்சரிக்கும் போது (தற்போதைய சிரக சஞ்சாரத்தில்) ஒருவருடைய யாதகத்தில் சந்திரன் நிற்கும் (சந்திர) இராசிக்கும் 5 ஆவது இராசியில் சஞ்சரிக்கும் காலம் பஞ்சம சனி என்றும் 8 ஆவது இராசியில் சஞ்சரிக்கும் காலம் அட்டமத்துச் சனி என்றும் 12 ஆவது இராசியிலும், சந்திர இராசியிலும், சந்திரனுக்கு 2 ஆவது இராசியிலும் சஞ்சரிக்கும் காலம் ஏழரைச் சனி என்றும் இவ் மூன்று இராசிகளையும் கடக்க எடுக்கும் காலம் ஏழரை ஆண்டுகள் ஆகின்றன. அதனால் ஏழரைச் சனி என்று கூறுவர்.

சனீஸ்வரன் சூரிய பகவானுக்கும் சாயா தேவிக்கும் புரட்டாதிமாதமுதல் சனிக்கிழமை பிறந்தவர். இவர் மந்தகதி உடையவர். சனீஸ்வரர் ஒரு இராசியைக்கடக்க இரண்டரை வருடங்கள்ஆகின்றன. ஆகவே ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒவ்வொரு முப்பது ஆண்டுகளுக்கு ஒரு தடவை இத் தோஷங்கள் சுழற்சியாக ஏற்படுகின்றன. அதனால் போலும் 30 வருடங்களுக்கு மேல் கஷ்டமாக வாழ்ந்தவர்களும் இல்லை சிறப்பாக வாழ்ந்தவர்களும் இல்லை என்ற முதுமொழி பிறந்தது.

வாழ்க்கையில் முதலில் வரும் ஏழரைச் சனி காலத்தை மங்கு சனி என்றும், இரண்டாவதாக வருவதை பொங்கு சனி என்றும், மூன்றாவதாக வருவதை மரணச் சனி என்றும் அழைப்பர். இக் காலங்களில் பேருக்கு ஏற்றாற் போல் மற்றைய கிரகங்களின் நிலைகளை பொறுத்து பலன்கள் கிடைக்கும் என்கின்றது ஜோதிடம்.

இச் சனித்தோஷ காலங்களில் புத்திர பாக்கியக் குறைவு, மரண பயம், அதிக பிரயாணம், அதிக செலவு, பண நஷ்டம், தேக சுகக் குறைவு, வீண் சச்சரவு என்பன உண்டாகும். இவை யாவும் சனித்தோஷத்தினால் ஏற்படுபவை என ஜோதிடத்தில் கூறப்பெற்றுள்ளது. இத் தோஷத்தினால் பீடிக்கப் பெற்றவர்கள் தோஷ நிவர்த்தி செய்வதால் சனீஸ்வரன் மகிழ்வுற்று தாகங்கள் குறைவடைந்து நன்மைகள் ஏற்படுவதாக ஜதீகம் இவற்றுள் ஏழரைச் சனிக் காலம் மிகவும் கஷ்டமான காலமாகவும்



ஜோதிடம் கணிக்கின்றது.

"சனீஸ்வரனைப்போல் கொடுப்பாரும் இல்லை கெடுப்பாரும் இல்லை" என்பது ஜோதிடப் பழமொழி. அதனால் மக்களுக்குச் சனி பகவானிடம் சற்று அச்சம் உண்டு. இவ் இராசிகளில் சனீஸ்வரன் சஞ்சரிக்கும் போது பல கஷ்டங்களையும் நஷ்டங்களையும் தந்து துன்பப்படுத்திய சனீஸ்வரன் இவ் இராசிகளைக் கடந்து அடுத்த இராசிக்குச் செல்லும் போது நஷ்டங்களை ஈடு செய்யும் வகையில் கொடுத்து விட்டு செல்வார் என்பது ஜதீகம்.

**விரத அனுட்டான முறைகள்**

சனி தோஷம் உள்ளவர்கள் புரட்டாதி மாதத்துச் சனிக்கிழமைகளில் காலையில் நல்லெண்ணெய் வைத்து ஸ்நானம் செய்து ஆலயம் சென்று கறுப்புத் துணியில் எள்ளை சிறு பொட்டலமாகக் கட்டி எள்ளெண்ணை (நல்லெண்ணெய்) விட்டு விளக்கேற்றி அர்ச்சனைகள் செய்து சனீஸ்வரதோத்திரம் பாடிசனீஸ்வரனைவழிபட வேண்டும். அதன் பின் சிவ விஷ்ணுக்களை வழிபட்டு பிரார்த்தித்து கோளறு பதிகம், தேவாரம் ஓதி அல்லது விஷ்ணு தோத்திரம் பாடி துதிக்க வேண்டும்.

வீடு சென்று உணவருந்தி விரதம் முடிக்க வேண்டும். சனீஸ்வரனின் வாகனமாக காகம் அமைவதால் உணவருந்தும் முன் காகங்களுக்கு உணவு படைத்த பின்பே தாம் உணவு அருந்துவர். மற்றைய விரதங்களின் போது எண்ணெய் வைத்து தோயும் வழக்கம் இல்லை ஆனால் சனிக்கிழமை - சனீஸ்வரனுடைய விரதத்திற்கு மாத்திரம் எண்ணெய் வைத்து தோயும் முறை கடைப்பிடிக்கப் பெறுகின்றது.

அவரவர் வினைக்கேற்ப பலன்களை வழங்குவதில் சனீஸ்வரன் நீதி தவறாதவர். இவரது தினமான சனிக்கிழமைகளில் விரதம் இருந்து சாயா புத்திரனை வழிபடுவோருக்கு நீண்ட ஆயுளும் துன்பம் இல்லா வாழ்வும் கிடைக்கும். புரட்டாதி மாத முதல் சனி வாரத்தன்று சூரியன் மனைவியான சாயாதேவி மூலம் சனி பகவான் தோன்றினார். சாவர்ணிமனுவும், பத்திரை என்ற பெண்ணும் இவருக்கு உடன் பிறப்புக்கள். ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விரதம் இருக்க முடியாதவர்கள் புரட்டாதி சனிக்கிழமைகளில் விரதம் இருக்கலாம். சனிக்கு அதிபதி மகா விஷ்ணு. அதனால் சனிக்கிழமைகளில் விஷ்ணு சக்கர நாமம் பாராயனம் செய்வது நன்மையைத் தரும்.

## இலங்கை-சுவிட்சர்லாந்துக்கு இடையில் மீண்டும் நேரடி விமான சேவை

(கொழும்பு)

இலங்கைக்கும் சுவிட்சர்லாந்துக்கு இடையிலான நேரடி விமான சேவை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

இந்த விமான சேவையை சுவிஸ் சர்வதேச விமான சேவை நிறுவனம் மீண்டும் மேற்கொள்ள தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி முதல் இந்த சேவை மீண்டும் அமுலுக்கு வரவிருக்கிறது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வாரத்தின் வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் சுவிட்சர்லாந்தின் சூரிச் நகருக்கு விமான சேவைகள் மேற்கொள்ளப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கட்டணங்கள் செலுத்தாததால் மின் விநியோகத்தில் சிக்கல் நிலை

(கொழும்பு)

நாட்டில் அடுத்த மாதத்தின் பின்னர் மின்சார விநியோகத்தில் சிக்கல் நிலைமை ஏற்படும் என மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின்சாரம் பயன்படுத்தும் மக்கள் 44 பில்லியன் ரூபாய் மின்சாரக் கட்டணம் செலுத்தாமையினால் இந்த நிலைமை ஏற்படும் அபாயம் உள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் மக்கள் உடனடியாக மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

எனினும் மக்களைச் சிரமத்திற்குள்ளாக்கும் வகையில் மின்சாரத் தடை செய்து மக்களை சிரமத்திற்குள்ளாக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளாது.

எனினும் தொடர்ந்தும் அதனை மேற்கொள்ள முடியாது. இதன் காரணமாக அடுத்த மாதத்தின் பின்னர் மின்சாரம் வழங்குவதற்கு சிக்கல் நிலைமை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

## என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்

### ரத்வத்த வாதம்



(கொழும்பு)

அமைச்சர் ஒருவர் எந்த சந்தர்ப்பத்திலும் சிறைச்சாலையை பார்வையிடுவதற்கான உரிமையுள்ளது. அதற்கு யாரிடமும் அனுமதிபெறதேவையில்லை என லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

குடிபோதையில் துப்பாக்கியுடன் வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்றமை தொடர்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் முதல் முறையாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்றதனை ஏற்றுக்கொள்கின்றேன். எனினும் குடி போதையுடன் சென்று துப்பாக்கியை காட்டி சிறைக் கைதியை அச்சுறுத்தியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் மிரட்டுவதற்கு எனக்கு பைத்தியமில்லை எனத் தெரிவித்துள்ளார். மேலும் நான் வெலிக்கடையில் உள்ள தூக்கு மேடையை பார்க்க சென்றேன்.

பகல் என்றாலும் இரவென்றால் எனக்கு சிறைச்சாலைக்கு செல்ல அனுமதி உண்டு. எனக்கு கீழ் 29 சிறைச்சாலைகளும் இரண்டு புனர்வாழ்வு முகாம்களும் உள்ளன.

உள்ளே என்ன நடக்கின்றதென பார்க்குமாறு எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. நான் சிறைச்சாலைகளை பொறுப்பெடுக்கும் போது அவற்றிற்குள் பாரிய பிரச்சினைகள் காணப்பட்டன.

நான் அவற்றினை நிறுத்தினேன். உள்ளே இடம்பெறும் போதை பொருள் வர்த்தகத்தை நிறுத்தினேன். பாரிய குற்றவாளிகளை வேறு இடத்திற்கு அனுப்பினேன்.

தொலைபேசி வர்த்தகங்களை நிறுத்தினேன். பாதுகாப்பு காரணங்கள் காரணமாக சில விடங்களை என்னால் கூற முடியாதுள்ளது.

உள்ளே நடந்த குற்றங்களை தடுத்தமையினால் என் மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

அத்துடன் நான் பெண் ஒருவருடன் வெலிக்கடைக்கு சென்றதாக கூறப்படும் கதைகள் போலியானதாகும். இந்த அனைத்து விடயங்களையும் எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் தெளிவுப்படுத்துவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# சிறைச்சாலை சம்பவம்

## சர்வதேச மயப்படுத்தப்பட்டு விட்டது

## அச்சமின்றி சாட்சியங்களை வெளிப்படுத்துங்கள்

## கைதிகளிடம் கஜேந்திரகுமார் கோரிக்கை

**(கொழும்பு)**

**சிறைச்சாலை சம்பவம் தொடர்பான விசாரணைகளின் போது தயக்கமின்றி சாட்சியங்களை வழங்குமாறு கைதிகளிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**



அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பத்து தமிழ் அரசியல் கைதிகளும் முழந்தாழிடப்பட்டதோடு இருவருக்கு கடுமையான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக உறுதிப்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். நிகழ்ந்த சம்பவங்களை விசாரணைகளின் போது தயக்கமன்றி சாட்சியங்களாக வழங்குமாறும் அவர்களிடத்தில் நேரில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அவரது கட்சியின் சட்ட ஆலோசகருமான சட்டத்தரணி காண்டீபனும் நேற்று முன்தினம் முற்பகலளவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நேரில் சந்திப்பதற்காக அநுராதபுரம் சிறைச்சாலைக்கு நேரில் சென்றிருந்தனர்.

இதன்போது முதலில் சிறைச்சாலைக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

அதன்பின்னர் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரைத் தொடர்பு கொண்டபோதும் பலனளிக்காத நிலையில் சில மணிநேர காத்திருப்பின் பின்னர் சிறைக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதி அளிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் நாம் வெளிப்படையான விசாரணைகளை முன்னெடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி வருகின்றோம். இராஜாங்க அமைச்சர் குறித்த விடயதானத்திலிருந்து மட்டும் பதவி விலகியிருப்பதால் இந்த விடயத்திற்கு தீர்வு ஏற்பட்டு விடாது.

ஆகவே விசாரணைகளை முன்னெடுப்பதற்கான அழுத்தங்களை நாம் தொடர்ந்தும் வழங்கவுள்ளோம். அவ்விதமான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்போது தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் குறித்த தினமன்று நடைவெற்ற விடயத்தினை வெளிப்படுத்துமாறு அவர்களிடத்தில் கோரிக்கை விடுத்துள்ளோம்.

எனினும் அவர்கள் அவ்விதமான வெளிப்படுத்தல்களைச் செய்வதால் தமக்கு ஏதேனும் அச்சுறுத்தல்கள், அல்லது நெருக்கடிகள் எழலாம் என்று கருதுகின்றனர். தற்போதைய நிலையில் சிறைச்சாலையில் நடைபெற்ற விடயம் சர்வதேச மயப்படுத்தப்பட்டு விட்டது. ஐ.நா. வதிவிடப்பிரதிநிதியே இவ்விடயம் சம்பந்தமான கரிசனையை வெளியிட்டுள்ளார்.

ஆகவே, அரசியல் கைதிகள் அச்சமடையாது, தமக்கு நிகழ்ந்த விடயங்களை வெளிப்படுத்த வேண்டும் என்று கோரியுள்ளோம். அத்துடன் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் எம்மாலான நடவடிக்கைகள் அனைத்தையும் தொடர்ச்சியாக எடுக்கவுள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-5-250)

## ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால்

## 119 ஐ தொடர்பு கொள்ளுங்கள்

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

ஒன்லைன் முறைமையில் பாடசாலை மாணவர்களுக்கு கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு, எவரேனும் ஒருவரால் ஏதாவதொரு வகையில், குறித்த கற்பித்தல் நடவடிக்கைகளை நிறுத்துமாறு அச்சுறுத்தல் விடுக்கப்படுமாயின் அது தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு நேரடியாக முறைப்பாடு செய்யுமாறு பொலிஸ்துறை தலைமையகம் அறிவித்தலொன்றை விடுத்துள்ளது.

அவ்வாறே, குறித்த ஆசிரியர்கள் அவசியம் ஏற்படின் 119 பொலிஸ் துறையின் அவசர அழைப்புப் பிரிவுக்கும் இது தொடர்பில் அறிவிக்க முடியும் என அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பில் தாமதிக்காமல், சரியான முறையில், மிகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபருக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மதிய தூக்கம்

என்னுடைய நண்பர் ஒருவர் இருக்கின்றான். மதியம் சாப்பிட்டு முடிந்ததும் அப்படியே சாய்ந்து விடுவார். கொஞ்ச நேரம் தூங்கிவிட்டு வருவார். அதன் பின்பு சுறுசுறுப்பாக வேலை செய்வார்.

பொதுவாக எல்லோருக்கும் மத்தியானம் சாப்பிட்ட பின்பு கொஞ்சம் கீழே சாய்ந்து தூங்கினால் போதும் என்று தோன்றும். இது இயற்கை தான். கொஞ்சம் தூங்கி எழுந்தால் அதன்பின்பு உடம்பும் கொஞ்சம் சுறுசுறுப்பாக இருக்கும்.

அறிவியல் ஆய்வுகள் என்ன சொல்கின்றது தெரியுமா? இரவுத் தூக்கத்தின் நடுப்பகுதியிலிருந்து 12 மணிநேரம் கழித்து உடம்பு அதிகமாக சோர்வடைகின்றது. உறக்கத்தைத் தேடுகிறது அந்த நேரம்.

ஒரு பதினைந்து நிமிடம் தூக்கம் கிடைத்ததென்றால் உடம்பு மறுபடியும் இலேசாக ஆகிவிடும். கடுமையான உழைப்புக்குத் தன்னை தயார்படுத்திக் கொள்ளும். நீண்ட தூக்கங்களை விட இது மாதிரி குட்டித் தூக்கங்களுக்கு மதிப்பு அதிகம். இதை நேப் என்று சொல்வது வழக்கம்.

நெப்போலியன் குதிரைச் சவாரியில் இருக்கின்ற பொழுதே தூங்குவது வழக்கம்–இல்லையா? அதனால் அந்தப் பெயர் வந்தது என்று சிலபேர் சொல்லுவார்கள்.

ஆனால் உண்மையான காரணம் அது இல்லை. Knappian என்பது ஒரு பழைய ஆங்கில வார்த்தை. அதிலேயிருந்து வந்தது தான் நேப்– என்று விபரம் தெரிந்தவர்கள் சொல்கின்றார்கள்.

மிகவும் பெரிய பொறுப்பிலே இருந்தவர்கள் எல்லாம் மத்தியானம் தூங்கி எழுந்து கொள்வது உண்டாம். வின்ஸ்டன் சேர்ச்சில் மதியம் மூன்று மணிக்குத் தூங்க ஆரம்பித்தால் ஆறுமணிக்குத் தான் விழிப்பாராம்.

இரண்டாவது உலக யுத்தம் நடந்தபோது ஜேர்மன்காரர்கள் லண்டனில் குண்டு போட்டார்கள். அப்பொழுது சில சமயம் இவருடைய தூக்கம் கலைந்திருக்கின்றது.

உயிரியல் வல்லுநர்கள் மிருகக்காட்சிச்சாலையில் உள்ள மனிதக் குரங்குகளை ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கின்றார்கள். அதெல்லாம் மத்தியான நேரத்தில் தூங்குமாம். விடியற் காலையில் புத்துணர்ச் சியோடு இருக்குமாம். பரிணாமக் கொள்கையின்படி இது மனிதர்க ளுக்கும் அது தொடர்ந்து வந்திருக்கின்றது.

குட்டித் தூக்கத்திற்கு பின்பு சூடான பானங்கள் சாப்பிட்டால் விசாலப் பார்வை கிடைக்குமாம். கோப்பி ட பழக்கம் இல்லாதவர்கள் எலுமிச்சை சாறு அருந்தலாமாம்.

தூங்கி எழுந்த உடனே இசையைக் கேட்கிறதோ... அல்லது புத்தகம் வாசிப்பதோ நல்லதில்லையாம். அது மேலும் தூக்கத்தை கிளறுமாம். சாப்பிட்டவுடன் அப்படியே படுத்து விடுவதை விட மூன்று குவளை தண்ணீர் குடித்துவிட்டுப் படுத்தால் நல்லதாம். செரிமானம் சுலபமாக இருக்குமாம்.

சியஸ்டர் என்று சொல்லப்படுகின்ற இந்த மதிய தூக்கம் இயற்கைக்கு புறம்பானது அல்ல. இது நல்லதற்குத் தான் என்று அது சம்பந்தமான நிபுணர்கள் எல்லாம் சொல்கின்றான்கள். மதியத் தூக்கம் மாதிரியே பயணத் தூக்கம் என்பது ஒன்று. பிரயாணம் செய்த பொழுது தூங்குவது. சிலபேர் பேருந்திலே உட்கார்ந்த உடனே தூங்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஒருத்தர் டாக்டரைத்தேடி வந்து கேட்டார்...

ஏன் டாக்டர்? பேருந்திலே உட்கார்ந்து போகும் போது தூங்குவது தவறா? என்று கேட்டார்.

அது ஒன்றும் தவறு இல்லையே என்றார் டாக்டர். அப்புறம் ஏன் என்னை வேலையை விட்டு நீக்கி விட்டார்கள்? என்றார் அவர்.

நீங்கள் என்ன வேலை பார்க்கின்றீர்கள்? என்றார் டாக்டர்.

பேருந்திலே சாரதி வேலை பார்க்கின்றேன் என்றார் அவர்.




## மொட்டைத்தலை



"குருவே! எனது முழங்காலில் வலி உண்டாகியுள்ளது. அதைப் போக்க வழி ஏதேனும் சொல்லுங்கள்," என்று குருவைப் பார்த்து கேட்டார் அரசன்.

"அரசே! அரண்மனை வைத்தியரைக் கேட்டால்தான் நல்ல வழி தெரியும். இருந்தாலும் நான் கேள்விப்பட்ட ஒரு செய்தியைச் சொல்கிறேன்.

பொடுதலையை வைத்துக் கட்டினால் முழங்கால் வலி நீங்கிவிடும்," என்று கூறிவிட்டு, குருநாதர் அரசனிடமிருந்து விடைபெற்றுச் சென்று விட்டார்.

உடனே அரண்மனை வைத்தியரை அழைத்து வரும்படி சேவகர்களை அனுப்பி வைத்தான் அரசன். சேவகர்களும் அரண்மனை வைத்தியரின் வீட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

அரசனுக்கு முழங்கால் தாங்க முடியாத அளவுக்கு வலித்தது. அரண்மனை வைத்தியர் வரும் வரை வலியைத் தாங்க முடியாமல் துடித்தான். அப்போது அங்கே பண்டிதன் ஒருவன் வந்தான்.

"குருநாதர் சொன்னபடி பொடுதலை வைத்துக் கட்ட வேண்டும்!" என்று அவரிடம் கேட்டான் அரசன்.

அந்த பண்டிதனுக்குத் தமிழே அரைகுறை. வைத்தியம் என்றால் என்னவென்றே தெரியாது.

"பொடுதலை" என்றவுடன் தனது கையில் இருந்த அகராதியைப் பிரித்து பொடுதலைக்குப் பொருள் கண்டறிந்தார்.

பின்னர், பண்டிதன் அரசனைப் பார்த்து, "அரசே! பொடுதலை என்றால் முடியில்லாத தலை, என அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது" என்று கூறினான். (தொடரும்)

# மகாபாரதம்




திருதராஷ்டிரன் சொன்ன இந்திரனுக்கும் பிரகலாதனுக்கும் நடைபெற்ற உரையாடலை எடுத்துரைத்தார்.

பீஷ்மர் "தருமா..நீ கண்டிப்பாக அறிந்துக் கொள்ள வேண்டியது இது. முன்பு நீ நடத்திய ராஜசூயயாகத்தில் உனது செல்வத்தைக் கண்டு பொறாமை கொண்ட துரியோதனன் தந்தையிடம் சென்று புலம்பினான்.

அப்போது திருதராஷ்டிரன் "மகனே! எதற்காக இப்படி சோர்ந்து காணப்படுகிறாய்? உனக்கு நேர்ந்த துன்பம் என்ன?" என வினவினான்.

அதற்கு துரியோதனன் "தந்தையே! தருமனது அரண்மனையில் கல்வியிற் சிறந்த பதினாயிரம் பேர் தங்கப்பாத்திரத்தில் உணவு உட்கொள்கின்றனர்.

இந்திரப் பிரஸ்தம் இருக்கிறது. அது கண்டு மனம் புழுங்குகிறது என்றான். அவன் மன வருத்தத்தை உணர்ந்த திருதராஷ்டிரன் "மகனே நீ சீலத்தைப் போற்றுவாயாக.

அதனைப் போற்றினால் மூவுலக ஆட்சியைக் கூட நீ பெறலாம். சீலம் உள்ளவர்களால் உலகில் பெறமுடியாதது ஏதும் இல்லை.

மாந்தாதா ஒரே இரவிலும், ஜனமேஜயர் மூன்று நாட்களிலும் நாபகர் ஏழு நாட்களிலும் பூமியைப் பெற்றார்கள். இவர்கள் சீலத்தைப் போற்றியதால் மாபெரும் புகழையும் அடைந்தார்கள்.

சீலம் என்பது பிற உயிர்க்கு நன்மை செய்தல், கருணை, தானம் இம்மூன்றும் சேர்ந்த நற்குணம் ஆகும்.

இதைப்பற்றி நீ நன்கு உணர்ந்து கொள்ள முன்னர் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன் கேள்.

முன்னொரு காலத்தில் நாரதரால் சொல்லப்பட்ட சீலத்தை மேற்கொண்ட பிரகலாதன் இந்திர உலகம் முதலான மூன்று உலகங்களையும் பெற்றான்.

நாட்டை பறிகொடுத்த இந்திரன், பிரகஸ்பதியை (வியாழ பகவான்) அடைந்து உய்யும் வழியை அருளும்படி வேண்டிக் கொண்டான்.

பிரகஸ்பதி மோட்ச மார்க்கத்திற்குக் காரணமான ஞானத்தைப் பற்றிக் கூறினார். இந்திரன் "இதைவிட மேலானது இருக்கிறதா? இவ்வளவுதானா?" என வினவினான்.

(தொடரும்)

நியாயத்தை விடக் கருணை உயர்ந்தது; புனிதமானது.

*– கர்மயோகி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை நாமல் முன்னெடுக்க வேண்டும்

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது கூறியிருந்தார்.

ஆளுந்தரப்பில் இருக்கக்கூடிய அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அரசியல் என்ற எல்லை கடந்து, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் மகன் என்ற தகைமையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பெறா மகன் என்ற உறவையும் கொண்டவர்.

எனவே தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என நாமல் ராஜபக்ஷ கூறும்போது, அஃது கனதியான விடயமாகப் பார்க்கப்படும்.

தவிர, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை தமிழ் அரசியல் கைதிகளுக்கு மிகப் பெரும் மன ஆறுதலையும் நம்பிக்கையையும் நிச்சயம் ஏற்படுத்தியிருக்கும்.

அதாவது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் உரையாற்றினார் எனில்,

அந்த உரை தொடர்பில் ஏலவே பிரதமருடனும் ஜனாதிபதியுடனும் கலந்துரையாடப்பட்டிருக்கும் என்று அனுமானிக்கக்கூடிய சான்று அதற்குள் உண்டு என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சராக இருந்த லொஹான் ரத்வத்த அநுராதபுரம் சிறைச்சாலைக்குத் தனது நண்பர்களுடன் சென்று, தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளில் இருக்க வைத்து, துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய சம்பவம் இலங்கை அரசியலில் பேசுபடுபொருளாக இருந்து வருவது தெரிந்ததே.

நிலைமை இதுவாக இருக்கையில், மேற்படி சம்பவத்தை அடுத்து அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்து, அவர்களுக்கு மறுவாழ்வு வழங்கவும் அவர்களைச் சமூகத்தில் இணைக்கவும் தான் நடவடிக்கை எடுப்பதாக உறுதிமொழி வழங்கியுள்ளார்.

இந்த உறுதிமொழி தமிழ் அரசியல் கைதிகளிடையே தங்களின் விரைவான விடுதலை தொடர்பில் ஆவலை ஏற்படுத்தியுள்ளது.

ஆக, அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆசை காட்டியதாக இல்லாமல்; அவர்களை விரைந்து விடுதலை செய்ய உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் நம் அவசர கோரிக்கை.

# யாழ். பல்கலை பட்டமளிப்புக்கு இப்போது அனுமதி இல்லை

## நிலைமைகளைப் பொறுத்து பரிசீலிக்கப்படும் சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் நாட்களில் கோவிட் - 19 நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் யாழ். பட்டமளிப்பு விழாவை நேரடியாக நடத்துவது பற்றி அன்றையநாளில் சாதகமாகப் பரிசிலிக்கப்படலாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அசேல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 07 ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு நடத்துவதற்கான அனுமதிகோரி யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரால் அனுப்பிவைக்கப்பட்ட கோரிக்கைக்கான பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

மேலும், தற்போது நாட்டில் விதிக்கப்பட்டுள்ள கோவிட் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு அமைய அனைத்து விதமான ஒன்றுகூடல்களுக்கும் தடைவிதிக்கப்பட்டிருப்பதனால் தாங்களின் கோரிக்கையின்படி நிகழ்வை நடத்துவதற்கு அனுமதிக்க முடியாத நிலையில் இருக்கின்றோம். எனினும் எதிர் வரும் நாட்களில் கோவிட் - 19 நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் பட்டமளிப்பு விழாவை நேரடியாக நடத்துவது பற்றி அன்றையநாளில் சாதகமாகப் பரிசீலிக்கப்படலாம் என்றும் நிகழ்நிலையில் பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்கு ஆட்சேபனை ஏதுமில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம-3,33)

# யாழ். மாநகரில் வீடுடைத்து 10 பவுண் நகை கொள்ளை

## ஒருவர் கைது; ஒருவர் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் வீடுடைத்து 10 பவுண் தங்க நகைகளைத் திருடியவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டார். மற்றொருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் தேடப்படுகிறார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் சுபாஷ் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் கடந்த 15ஆம் திகதி 10 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டிருந்தன.

வீட்டிலுள்ள தாயும் மகளும் வேலைக்குச் சென்றிருந்த நிலையில் வீடுடைத்து இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவில் அன்றைய தினமே முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதுதொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி முதன்மை பொலிஸ் பரிசோதகர் விதான பத்திரனவின் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது.

குருநகரைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 5 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன.

சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொருவர் தலைமறைவாகியுள்ளார். சந்தேகநபர் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் டில்றுக் தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் குணசேகர, பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கொஸ்தாபல்கள் கபில்தாஸ், விஜயகாந்த், நவநீதன் மற்றும் கஜானன் ஆகியோரினால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ம-3,18,33)

# வட்டுக்கோட்டையில் வீடுடைத்து நகை திருட்டு

(அராலி)

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டுக்கோட்டை கலைநகர் பகுதியில் நேற்று முன்தினம் வீடுடைத்து பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, வீட்டில் உள்ளவர்கள் உறவினர்களின் வீட்டிற்கு சென்ற பின் வீட்டின் கூரை பிரிக்கப்பட்டு 3 பவுண் தங்க நகைகளவாடப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3,104)

## மருத்துவக் குறிப்பு

இஞ்சிச் சாற்றில் தேனும் சிறிதளவு எலுமிச்சம் பழ ரசத்தையும் சேர்த்து காலை வெறும் வயிற்றில் குறைந்த பட்சம் 7 வாரங்கள் சாப்பிட பூரண குணம் தெரியும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## உன்னால் முடியும் தோழா!

❖ ஒரு செயலின் முடிவில் உண்டாகும் பலனில் கருத்தைச் செலுத்தும் அளவிற்கு அதைச் செய்யும் முறையிலும் கவனம் இருக்கவேண்டும். இதனால் குறிக்கோளை எளிதாக எட்ட முடியும்.

❖ எதையும் கைமாறு கருதாமல் பிறருக்குக் கொடுப்பதில் மகிழ்ச்சிகாணுங்கள். ஏனெனில், எல்லா உயிர்களிலும் கடவுள் நிறைந்துஇருக்கிறார்.

❖ ஒவ்வொரு மனிதனும் ஒரு சொந்த லட்சியத்தை வைத்துக் கொள்வது அவசியம். சிந்தனை முழுவதும் குறிக்கோளைச் சார்ந்ததாக இருக்கவேண்டும்.

❖ என்னால் எல்லாம் செய்ய முடியும் என்று நீங்கள் நம்பினால், வாழ்வில் அனைத்தையும் சாதிக்கும் வல்லமை உள்ளவர்களாகத் திகழ்வீர்கள்.

❖ உலகத்தின் பரப்பைப் போல உங்கள் இதயத்தை பரந்து விரிந்ததாகச் செய்யுங்கள். அப்போது எங்கும் கடவுளின் பேராற்றல் வியாபித்திருப்பதைக் காண்பீர்கள்.

❖ மனிதனைச் சுற்றி எத்தனையோ பந்தங்கள் கட்டுகளாக சுற்றியிருக்கின்றன. கடவுள் ஒருவரால் மட்டுமே அவற்றை அவிழ்த்து விடுவிக்க முடியும்.

# மாகாண சபைத் தேர்தல்கள்

40

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்கு அல்லது வழக்கமான வாழ்விடங்களுக்கு பாதுகாப்பாகவும் கண்ணியத்தோடும் திரும்பிச் செல்வதற்கு இடமளிக்கும் நிலைமைகளை ஏற்படுத்துவதும் அதற்கான வழிவகைகளை வழங்குவதுமான முதன்மையான கடமையும் பொறுப்பும் நம்பகத்தன்மை மற்றும் வகைகூறல் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டு மாகாண சபைகளின் கைகளிலேயே விடப்பட வேண்டுமென்பதை த.தே.கூ அங்கீகரிக்கின்றது.

## முஸ்லிம்கள் !

1996 ஆம் ஆண்டிற்கு முன்னர், வட மாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் தாம் வாழ்ந்த பகுதிகளில் பாரம்பரிய குடிகளாக இருந்துள்ளனர். அவர்கள் தமது சொத்துக்களைக் கைவிட்டு, நாட்டின் ஏனைய பாகங்களுக்குச் சென்று சொல்லொணாத் துன்பங்கள் அனுபவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டமை வருந்தத்தக்கதாகும்.

வட மாகாணத்திலிருந்து வெளியேறிய அனைத்து முஸ்லிம்களும் இயன்றவரை விரைவாக தத்தமது பகுதிகளுக்கு திரும்பிச் சென்று தமது வாழ்வாதாரத் தொழில்களை மீண்டும் தொடங்குவதை உறுதிப்படுத்துவதில் நாம் பற்றுறுதி கொண்டுள்ளோம். அவர்கள் திரும்பிச் செல்வதற்கு ஊக்குவிக்கப்படுவதோடு, தமது வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனைத்து உதவிகளையும் வட மாகாண சபை அவர்களுக்கு வழங்கும்.

முஸ்லிம்களின் நலன்கள் தொடர்பான எந்தப் பிரச்சினைக்கும் வட மாகாணத்தில் வாழுகின்ற ஏனைய சமூகங்களின் பிரச்சினைகளுக்கு வழங்கப்படும் அதேயளவு கவனிப்பு வழங்கப்படும். இம் மாகாணத்தில் வாழும் அனைத்து சமூகத்தவருக்கும் நீதியானதும் சமத்துவமானதுமான கவனிப்பு கிடைக்கப்பெறுவதை இம் மாகாண நிர்வாகம் உறுதி செய்யும்.

## போர் விதவைகள் !

யுத்தம் வட மாகாணத்தில் மாத்திரம் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விதவைகளை விட்டுச் சென்றுள்ளது. அவர்களுடைய திறனைக் கட்டியெழுப்புவதற்கும் இப் போர் விதவைகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்குமான தெளிவானதொரு கொள்கைக்கான தேவையொன்றுள்ளது. இவ் விதவைகள், பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர்.

எனவே, அவர்களது தற்போதைய துயர் நிலையைத் துடைப்பதற்கு வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏனைய தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பினை இம் மாகாணசபை விரைவாகவும் வினைத்திறனோடும் ஏற்றுச் செயற்படும். யுத்தத்திற்குப் பிந்திய காணிப் பிரச்சினைகள்.

யுத்தம் முடிவுற்று நான்கு ஆண்டுகளின் பின்னர் இன்னமும் அரசாங்கம் உயர் பாதுகாப்பு வலயங்களாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வலயங்களாக பல பகுதிகளை அறிவித்து, அப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் அங்கு சென்று மீள் குடியேறவிடாது தடுக்கின்றது. உரிய நடைமுறைகள் இன்றி பெருமளவு காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடமிருந்து அரசாங்கத்தினால் கைப்பற்றப்பட்டன.

உரிய நடைமுறைகள் இன்றி காணிகளைக் கையகப்படுத்துவதற்கு எந்தவொரு ஜனநாயக அரசாங்கத்துக்கும் உரிமை இல்லை. தனியார் காணி உடைமையாளர்களின் உரிமைகளை அரசாங்கம் மதிக்க வேண்டுமென்பதோடு, அத்தகைய காணிகளை அவற்றின் சட்டபூர்வ உடைமையாளர்களிடம் மீளக் கையளிக்கவும் வேண்டும். இக் காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட கணிசமான தொகையினர் மிகவும் கஷ்டமான நிலைமைகளில் வாழுகின்றனர். காணி கையகப்படுத்தல் மற்றும் அவற்றைப் பிடித்து வைத்திருத்தல் தொடர்பான அரசாங்கத்தின் கடுமையான சட்ட விதிகள் பல ஆயிரம் தமிழர்களின் வளமான விவசாயக்காணிகளை பறித்துவிட்டது. அத்துடன், கடற்றொழில் மீது விதிக்கப்பட்டக் கட்டுப்பாடுகள் ஆயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பறித்து விட்டது.

வடக்கு- கிழக்கில் அரசாங்கம் காணிகளை பலவந்தமாக கையகப்படுத்துதல் மற்றும் பயன்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான அவசரத் தேவையொன்று நிலவுகின்றது. வடக்கு- கிழக்கில் காணிகள் மீதான கட்டுப்பாட்டை மாகாண நிர்வாகம் தக்க வைத்துக்கொள்வதில் த.தே.கூ பற்றுறுதி கொண்டுள்ளது. வடக்கு- கிழக்கின் இனத்துவ மற்றும் கலாசார தனித்துவத்தின் மீது குறிவைக்கும் காணி உடைமை, கட்டுப்பாடு மற்றும் பாவனை மீதான தற்போதைய கொள்கையை சீர்திருத்தாது நல்லிணக்கம் எதுவும் ஏற்பட முடியாது என்று த.தே.கூ. நம்புகிறது.

## சட்டமும் ஒழுங்கும் !

வட மாகாணம் சட்டமும் ஒழுங்கும் தொடர்பான நெருக்கடியொன்றை எதிர்கொள்கின்றது. அதன் மக்கள் அச்சத்தினாலும் பாதுகாப்பின்மை உணர்வினாலும் ஆட்டிப் படைக்கப்படுகின்றனர். குற்றம் புரிவோர், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒருவாறு தப்பித்துச் சென்றுவிடுகின்றனர். தமது மனித உரிமைகள் பாரதூரமாக மீறப்பட்டமையினால் பாதிப்புற்ற மக்களுக்கு நீதியோ அன்றில் பொறுப்புக்கூறலோ இல்லை.

குற்றமிழைப்போர் நீதியின் முன் கொண்டுவரப்படுவதில்லை. அதனால், பாதிப்புறுவோருக்கும் உயிர் தப்பியவர்களுக்கும் நிவாரணம் கிடைப்பதில்லை. இந்நிலைமையானது, மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான இலங்கை அரசாங்கத்தின் சர்வதேசக் கடப்பாடுகளின் பாரதூரமானதொரு மீறலாக அமைகின்றது. மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டம் ஆகியற்றின் மீறலுக்கான குற்ற விலக்களிப்பானது இலங்கையில் வடக்கு- கிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் ஒரு விதிவிலக்கு என்பதை விட நாளாந்த வழக்கமாகவே நிலவி வருகின்றது.

மாகாண சபையினால் பணிப்புரை விடுக்கப்படுகின்ற ஒரு பொலிஸ் படையே வடக்கு- கிழக்கிற்கான மிகவும் பயன்மிக்க ஒரு பொலிஸ் படையாக அமையுமென்று த.தே.கூ. நம்புகிறது. தற்போது மாகாணத்தில் மக்களுக்கும் பொலிஸ் சேவைக்குமிடையே எவ்வித நம்பிக்கையும் இல்லை. மக்களுக்கு அவர்களுடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது நம்பிக்கை இல்லை. அதனால், தமது சமூகத்தில் நிலவும் குற்றங்கள் மற்றும் பூசல்கள் பற்றிய கரிசனையோடு பொலிஸாரை அணுக அவர்கள் அஞ்சுகின்றனர்.

## தொழில் உருவாக்கம் !

எந்த ஒரு மாகாண சபையும் தொழில் இன்மைப் பிரச்சினையை கையாளவே விரும்பும். எனவே, அதனைச் செய்வதற்கு அதற்கு கருவிகள் தேவை. உண்மையில் வட மாகாணத்தில் நிலவும் தொழிலின்மையின் மூலகாரணங்களை அகற்றுவது த.தே.கூவின் முன்னுரிமைகளுள் ஒன்றாக அமையும்.

தொழில் வாய்ப்புக்களை உச்ச நிலைப்படுத்த பொருளாதாரத்தின் தொழில் முயற்சி மற்றும் வியாபாரத் துறைக்கு உறுதுணை புரிவதை த.தே.கூ ஆதரித்து நிற்கின்றது. நமது சமூகத்தில் செய்யப்பட வேண்டிய பல பணிகள் உள்ளன என்பதை நினைக்கும்போது இது குறிப்பாக, பொருத்தமுடையதாகிறது: சூழலைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் பொதுப் போக்குவரத்தை அபிவிருத்தி செய்தல் மேலும் சிறந்த சமூகப் பராமரிப்பு குற்றச் செயல்களையும் நாச வேலைகளையும் எதிர்த்துப் போராடுதல் புதிய உட் கட்டமைப்புகளிலான முதலீடு. இவையனைத்தும் தற்போதைய அரசாங்கம் எவ்வித தீர்வும் வழங்காத மிக முக்கிய தேவைகளாகும். அதன் மனப்பாங்கு தமிழ் மக்களுக்கு குறிப்பாக தவறிழைத்துவிட்டது. ஒப்பீட்டளவில், கைத்தொழில் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் உரிமை மறுக்கப்பட்ட மக்களை மீள ஒருங்கிணைப்பதையும் நிலைபேறான வளர்ச்சியை மேம்படுத்துவதையும் த.தே.கூ. ஆதரிக்கின்றது.

## தேசிய மற்றும் சர்வதேச உதவியுடனான அபிவிருத்தி !

யுத்தத்திற்குப் பிந்திய புனர்நிர்மாணத்திற்கு, யுத்தத்தின் பாதிப்புகளுக்கு தீர்வு காண்பதும் சந்தை நிறுவனங்களுக்கு உறுதுணை புரிவதும் அதன் மூலம் தனியார் துறை உற்பத்தியில் நீண்ட கால வளர்ச்சிக்கான திறனை உருவாக்குவதுமான ஒரு ஒருங்கிணைந்த வறியோர் சார்பு அணுகுமுறை தேவை. இம் மாகாணத்தில் நிலவும் நீண்ட கால முதலீடு மற்றும் உதவி பிரச்சினைகளை தீர்த்து வைக்க த.தே.கூ. இலங்கை அரசுடனும் சர்வதேச சமூகத்துடனும் புலம்பெயர் தமிழர்களுடனும் இணைந்து செயற்படும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்சியையும் நலச் செழிப்பையும் பெற்றுக் கொள்வதில் புலம்பெயர் தமிழர்கள் ஒரு முக்கிய அம்சமாகும். எனவே, அபிவிருத்தித் துறையில் மட்டுமன்றி, நீதியானதும் நடைமுறைச் சாத்தியமானதும் நீடித்து நிலைக்கக்கூடியதுமான ஓர் அரசியல் தீர்வை காண்பதற்கான எமது தாகத்திலும் அவர்களது பெறுமதி மிக்க உதவியையும் நிபுணத்துவத்தையும் பெற்றுக்கொள்வோம்.

(தொடரும்...)

## 5 இலட்சத்தை...

தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 500,764 ஆக அதிகரித்துள்ளது.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்தைக் கடந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,186 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 429,776 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## 12 ஆயிரத்தை...

ஆண்களும் 59 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில், 30 வயதுக்குட்பட்டவர்களில் ஆண் ஒருவரும் 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 16 ஆண்களும் 12 பெண்களுமாக 28 பேரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 45 ஆண்களும் 47 பெண்களுமாக 92 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 11,938 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மதுச்சாலைகளை...

வுறுத்தலுக்கு அமைய சகல மதுபான சாலைகளும் நேற்று மாலை 4 மணிக்கு திறக்கப்பட்டன. அதனால் மதுபானச் சாலைகளில் பலர் திரண்டிருந்தனர்.

கடந்த ஓகஸ்ட் 21ஆம் திகதி மூடப்பட்ட மதுபானச்சாலைகள் நேற்று செப்ரெம்பர் 17ஆம் திகதி மாலை மீளத் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மதுப் பிரியர்கள்...

பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து 13 பேரைக் கைது செய்துள்ளனர்.

நாடு பூராகவும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டமானது ஒக்ரோபர் முதலாம் திகதி அதிகாலை 4 மணி வரை நீடிக்கப்பட்டுள்ள நிலையில் மதுபானச் சாலைகளை திறப்பதற்கு மதுவரித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

இதனால் வவுனியா நகரின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மதுபானச்சாலைகள் முன்பாக அதிகளவிலான மதுப் பிரியர்கள் திரண்டிருந்தனர்.

அத்துடன் நகரின் கண்டி வீதியில் அமைந்திருந்த மதுபானச்சாலை ஒன்று திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றது.

அங்கு சென்று சுகாதாரப் பிரிவினரும் பொலிஸாரும் மதுபானச்சாலை முன்பாக நின்றோர், வீதிகளில் சென்றோர், வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மறிக்கப்பட்டு சோதனை செய்ததுடன், 13 பேரைக் கைது செய்ததோடு குறித்த மதுபானச் சாலையையும் தனிமைப்படுத்தினர். (ம-3,250,299)

## யாழில் சமூக...

மூடப்பட்டுள்ள நிலையில் நேற்றைய தினம் அரசாங்கத்தினால் மதுபான சாலைகள் திறக்க அனுமதியளிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து மதுபானசாலைகளின் முன்றலில் நீண்டவரிசையில் மதுப் பிரியர்கள் காத்திருந்து மதுபானத்தைக் கொள்வனவு செய்ததை காணக்கூடியதாக இருந்தது.

மதுபானசாலைகளுக்கு அண்மையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்ட தோடு சமூக இடைவெளிபேணப்பட வில்லை.

யாழ்ப்பாணம் சந்திரசந்திகே.கே.எஸ் வீதியில் அதிகளவான மதுப் பிரியர்கள் கூடியிருந்த நிலையில் தெரு விளக்குகளும் அணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 15 - 19 வயதான...

கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

இந்தத் தகவலை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம்பெற்ற கோவிட்-19 கட்டுப்பாட்டுச் செயலணியின் கூட்டத்தில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ம-3)

## மதுபானசாலை...

துள்ளார்.

எனினும் நிதி அமைச்சிலிருந்து மதுவரித் திணைக்களத்துக்கு உத்தியோகப்பற்றற்ற வகையில் வந்த உத்தரவை அடுத்தே நாடு முழுவதும் மதுக்கடைகள் நேற்று திறக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மதுபானசாலைகளை திறக்கும் விவகாரம் குறித்து நிதி அமைச்சுக்கும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையே கலந்துரையாடல்கள் நடந்ததாக மதுவரித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மதுக்கடைகளை மீண்டும் திறக்க நிதி அமைச்சே அதிகாரப்பூர்வமற்ற ஒப்புதலை அளித்துள்ளது. எனினும் இது குறித்த எழுத்துமூல உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் வெளியிடப்படவில்லை.

இது குறித்து முறையான முடிவு எடுப்பதற்கு முன்பே சில ஊடகங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்தே மதுபானசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து மதுபானசாலைகள் முன்பு ஏராளமானவர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மதுவைக் கொள்வனவு செய்தனர். அத்துடன், மதுபானசாலைகள் முன்பாக பொலிஸாரும் நின்று பாதுகாப்பு வழங்கினர்.

இதற்கிடையில் மதுவரித் திணைக்கள உரிமம் பெற்ற வைன் விற்பனை நிலையங்கள் (FL 04 உரிமம்) மற்றும் பியர் மற்றும் வைன் கடைகள் (FL 22 B உரிமம்) கொண்ட மதுக்கடைகள் திறக்க முறைசாரா அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால் நேற்று அனைத்து வகை மதுபானங்களும் விற்பனை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## உயிரிழந்த...

திற்கு நீதிகோரி உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற குறித்த போராட்டம் தொடர்பில் தெரியவருகையில்,

காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் முன்பாகவுள்ள வீதியில், சுயநினைவற்று கிடந்த இளைஞனை மீட்டு, வைத்தியசாலையில் அனுமதித்தபோதே இளைஞன் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் கீரிமலை நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த ம.ஜெனுசன் (வயது-24) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் இந்த இளைஞன் குழுவொன்றின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்திருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த இளைஞன் ஒரு மரணச் சடங்கொன்றில் கலந்து கொண்டிருந்தவேளை, அங்கு சிலர் அவருடன் முரண்பட்டதாகவும் அவர்களே இளைஞன் மீது தாக்குதல் நடத்தியதாகவும் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆகவே, கொலைச் சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுத்து, கொலையாளிகளைக் கைது செய்யக் கோரி இளைஞனின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-3,18,33)

## வவுனியாவில்...

னர்.

கோவிட் தொற்றுக் காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 5 பேர் கோவிட் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

நேரியகுளம், செட்டிகுளம், சின்ன புதுக்குளம், கணேசபுரம், பூந்தோட்டம் ஆகிய பகுதியினைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கோவிட் தொற்றால் மரணித்தவர்களாவார்கள்.

இந்நிலையில் மரணித்த 5 பேரினது உடல்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,250,299)

## கோண்டாவிலில்...

தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைச் சேர்ந்த 68 வயதுடையவர் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## ஊரடங்கை...

அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றாதவர்கள் மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியதாக ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தனிமைப்படுத்தல் ஊரடங்கை கண்டிப்பாக அமுல்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ள அதேசமயம் மதுபானசாலைகள் நேற்று திறக்கப்பட்டு அதிகளவானவர்கள் அவற்றின் முன்பு ஒன்று கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தடுப்பூசி பெறாத...

ஏதேனும் கட்டுப்பாடுகளை விதிக்க முடிவு செய்தால் உரிய செயல்முறையைப் பின்பற்றும் என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர், சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவ வல்லுநர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, நாட்டில் மன்னார் உள்ளிட்ட சில இடங்களில் இது போன்ற நிகழ்வுகள் குறித்து ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

சுகாதார அமைச்சின் பேச்சாளர் மேலும் தெரிவித்ததாவது,

தடுப்பூசி போடப்படாத நபர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க அரசு முடிவு செய்தால், அது ஒப்புதல் செயல்முறை மூலம் செல்ல வேண்டும்.

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் கொரோனா வைரஸிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காகவும் ஊரடங்கு விதிக்கும் முடிவு எடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சு அத்தகைய உத்தரவுகளை பிறப்பிக்காததால், ஒரு கட்டத்திற்குள் நுழைவதற்கு தடுப்பூசி அட்டை கோரப்படுவதன் மூலம் மக்களின் உரிமைகளை மீறியதாகக் கூறப்படும் நிறுவனங்கள் மீது விசாரணை நடத்தப்படும் என்றார்.

கோவிட் -19 தொற்றாளர்கள் மற்றும் இறப்புகளின் சமீபத்திய செங்குத்தான குறைவு முக்கியமாக அரசினால் நடத்தப்பட்ட பிசிஆர் மற்றும் விரைவான அன்டிஜன் சோதனையின் குறைவால் ஏற்பட்டதாக சுகாதாரத்துறை தொழிற்சங்கங்களின் குற்றச்சாட்டுக்களை சுகாதார அமைச்சின் பேச்சாளர் மறுத்தார்.

கடந்த சில வாரங்களாக நாடுமுழுவதும் விதிக்கப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவே தொற்றாளர்கள் மற்றும் இறப்புகளின் சமீபத்திய குறைவுக்கு காரணமாகும். பரிசோதனை குறைக்கப்படவில்லை என்று மருத்துவ வல்லுநர் ஹேமந்த ஹேரத் உறுதியளித்தார். (ம-3)

## ஒக்ரோபர்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று முற்பகல் வீடியோ தொழில்நுட்பத்தினூடாக இடம்பெற்ற கோவிட்-19 ஒழிப்புச் செயலணியின் சிறப்புக் கூட்டத்தின்போதே, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்போது, பிள்ளைகளுக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதியால் கேள்வி எழுப்பியபோது பதிலளித்து உரையாற்றிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்த்தன,

"நாள்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள 12 முதல் 19 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி ஏற்றுமாறு, விசேட சுகாதார நிபுணர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது" என்றார்.

அத்துடன், "சிகிச்சையக (கிளினிக்) விசேட மருத்துவ நிபுணர்களின் கண்காணிப்பின்கீழ், பெற்றோர்களின் அனுமதியுடன், அந்தச் சிகிச்சையகங்களுக்குள் வைத்து மாத்திரம் மேற்படி சிறுவர்களுக்கான தடுப்பூசியை ஏற்றத் திட்டமிடப்பட்டுள்ளது" என்று சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட தடுப்பூசிகளை மாத்திரமே இளைஞர் - யுவதிகள் எதிர்பார்க்கும் நிலைமை தோன்றியுள்ளது என்றும் அவர்களுக்கென விசேட தடுப்பூசியொன்று அறிமுகப்படுத்தவில்லை என்றும், நாட்டு மக்களுக்கு ஏற்றப்படும் தடுப்பூசிகள் அனைத்தும் தரம்வாய்ந்தவை என்றும் எடுத்துரைத்த விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன மற்றும் பேராசிரியர் நீலிகா மாலவிகே ஆகியோர், அதனால், விசேட தடுப்பூசியொன்று கிடைக்கும் வரை காத்திருக்காது அனைவரும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள முன்வரவேண்டுமென்றும் வலியுறுத்தினர். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## இலங்கையில் கடந்த 18 மாதங்களில்

# மனித உரிமை நிலைவரம் மிகப்பெரிய பின்னடைவு

## ஐ.நா விசேட அறிக்கையாளர் ஃபெபியன்

*(ஜெனிவா)*

**கடந்த 18 மாதங்களில் மனித உரிமை நிலைவரம் மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது எனவும் பொறுப்புக்கூறல் விடயங்களிலும் முன்னேற்றமில்லை எனவும் ஐ.நா சபையின் உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீளிடம்பெறாமையை உறுதிப்படுத்தல் தொடர்பான விசேட அறிக்கையாளர் ஃபெபியன் சல்வியொலி தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையினது 48 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை குறித்த தமது அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உண்மை மற்றும் நீதியைத் தேடுவதற்கான நடவடிக்கைகள் போதிய அளவு முன்னெடுக்கப்படவில்லை.

இந்த விடயங்கள் நிலைமாறுகால நீதி வழங்கல் செயல்முறையையும் பாதித்துள்ளன என்றும் அவர் மேலும் தனது உரையின்போது தெரிவித்துள்ளார். (ம-03)

## வவுனியாவில் மேலும் 78 பேருக்கு கோவிட்

(வவுனியா)

வவுனியாவில் மேலும் 78 பேருக்க கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 78 பேருக்க மேலும் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-03,250,299)

## யாழில் மதுச்சாலை கொத்தணி அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழில் புதிய மதுபானசாலை கொத்தணி உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் மதுபானசாலைகள் திறக்க நேற்று அனுமதி அளிக்கப்பட்டது.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து மதுபானசாலைகளின் முன்பாகவும் நீண்ட வரிசையில் மதுப்பிரியர்கள் காத்திருந்து மதுபானத்தை கொள்வனவு செய்வதை காணக்கூடியதாக இருந்தது.

மதுபானசாலைகளுக்கு அண்மையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதோடு சமூக இடைவெளி பேணப்படவில்லை என்பதனையும் அவதானிக்கக்கூடியதாகவிருந்தது.


பொலிஸார் அவ்விடத்தில் வீதிக்கடமையில் ஈடுபட்டிருந்தும் சமூகஇடைவெளிபேணாமையை கருத்திற்கொள்ளாது செயற்பட்டதாகவும் சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-03)

## முல்லை. மாவட்டத்தில் 36 பேருக்கு தொற்று

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் 28 பேர் உட்பட முல்லைத்தீவு மாவட்டத்தில் 36 பேருக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் இம்முடிவுகள் நேற்று வெளியாகியுள்ளன. (ம-03)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 19.08.2021 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் துரைராசா ரவிச்சந்திரன்

[ பிள்ளையார் களஞ்சிய உரிமையாளர், மானிப்பாய் ]

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (16.09.2021) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்றது. அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (18.09.2021) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னார் இறைபதமடைந்த துயரச் செய்தியைக் கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டில் நிலவும் கொவிட் – 19 அசாதாரண சூழ்நிலையின் பொருட்டு அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக அனைவரையும் இந்நிகழ்விற்கு அழைக்க முடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்.
077 540 0702
குடும்பத்தினர்

**மணமகள் தேவை**

இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 43 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள அழகிய மணப் பெண்ணை இலங்கையில் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும்.

Jeyaratnam1988@gmail.com

**ENGLISH ஆங்கிலம்**

பிரத்தியேக வகுப்புகள்

உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

077 658 9443

யாழ்ப்பாணம் (7924)

**அலுமினிய Box Body விற்பனைக்கு**

சகல தேவைகளுக்கும் ஏற்ற களஞ்சியப் படுத்தலுக்கு அல்லது அறையாகப் பயன்படுத்தக்கூடிய ஒரிஜினல் அலுமினிய Box Body விற்பனைக்குண்டு. அண்ணளவாக நீளம் - 13', அகலம் - 6', உயரம் - 6' லொறி வாகனத்திற்கும் பூட்டக்கூடியது.

077 284 7850

**தேவை**

ஊர்ச் சேவல் 1 kg - 800/=, விறாத்துக் குஞ்சு 1 kg - 600/=, கல்பேட் 1 kg - 450/=, ஊர் முட்டை என்பன கொள்வனவு செய்யப்படும். (7917)

தாசன் பாம்

இல. 158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

077 312 7498

**கடை வாடகைக்கு**

தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டையில் கடை வாடகைக்குண்டு.

தொடர்பு

077 990 0783 (C-2568)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.